புதுக்கோட்டை ஸமஸ்தான

யுத்த அறிக்கை நிலையம்.

பிரசுரம்] 1941-ம் ௵ மார்ச்சு ௴ 22உ [ந. 36.

பிரஸங்கம் XXXVI.

முற்றுகையின் நீதிகள்.

இந்தப் பத்திரிகையில் இவ்விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுதவேண்டுமாய் தெரியப்படுத்திய காலத்தில், சண்டையில் முற்றுகை போடுவதில் என்ன தருமம் இருக்கக்கூடும், அல்லது நீதிநூல் முறைகளின்படி சர்ச்சை செய்வது பொருத்தமாகுமா என்றும் நண்பர் ஒருவர் உடனே கேட்கச்செய்தார். இந்த கேள்விகள் தகுதியானவைகளும் பதில் சொல்ல சிரமமுமானவைகள்தான். இருந்தாலும், ஹர் ஹிட்லர் தன்னுடைய "புதிய உலக முறை"க்கும், தான் ஹாலண்டு, பெல்ஜியம் இவைகளின் பேரில் படையெடுத்ததிற்கும், நார்வேயைப்போன்ற மத்தியஸ்த நாட்டில் தன் சைனியங்களை புகைக்கூண்டு வழியாய் இறக்கியதற்கும், அல்லது ஜெர்மன் ரீச்சில் ஸெகோஸிலேவியாவை உள்படுத்த எம். ஹாச்சாவிடம் பலவந்தமாக கையெழுத்துக்கள் வாங்கியதற்கும், அறநூல் இருப்பதாக வாதிப்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு, தேய்ந்து அழியச்செய்யும் இந்த உலகப்போரில் தற்காலம் முகான்மையாக விளங்கும் முற்றுகை விஷயத்தில் நீதி நூல்களை சாற்றுவது கஷ்டமாகாது என்று தோன்றுகிறது. ஆனால், இந்த வாதம் எவரையும் முக்கியமாக திருப்தி செய்யுமென்றாவது அல்லது இந்த உதாரணம் (நாம் ஹர் ஹிட்லர் வழிகளையாவது, வாதங்களையாவது அல்லது அவருடைய முடிவுகளையாவது கைக்கொண்டு பேசும் அபிப்பிராயமில்லாததால்) விவகாரத்திற்கிடமன்னியில் பொருத்தமுடையதென்றாவது நாம் அறிவிக்கவில்லை. எந்நிலைமையிலும், நமது நல்லெண்ணமுள்ள சிநேகிதரின் தானாய்வந்த கேள்விகள், தற்காலம் சண்டை முடிவின் போக்குக்கு நேர் காரணமுள்ள முற்றுகையின் முக்கிய அம்சங்களை சரிவர சர்ச்சை செய்ய ஆழ்ந்த ஊக்கத்தை உண்டுபண்ணிற்று.

முற்றுகை—அதன் பண்டைகால தற்கால தாத்பரியங்கள்.

நீதி விஷயங்களின் தன்மையை சர்ச்சை செய்யுமுன், நமக்கு முதலெடுப்பில் "முற்றுகை என்றால்" என்ன, அது தற்காலத்தில் என்ன பொருள்படுகிறது என்று தெரியவேண்டும். ஆதிகாலம் முதல் "முற்றுகை" என்ற சண்டையின் காரிய சாதகமான ஆயுதம் இருந்துகொண்டு வருகிறது. இந்தியாவின் மகத்தான இதிகாசங்கள் ஸ்ரீ ராமாயணம், மஹா பாரதம் இவைகளில் இதைப்பற்றி சுட்டிக் காட்டும் பல இடங்களையும் பார்க்கிறோம். பின்னிட்ட காலத்தில் ரோமாபுரி கிரீஸ் சரித்திரங்களில் பகைவர்களை சண்டையில் ஜயித்து அடக்க 'முற்றுகை"யை முக்கிய சாதனமாக உபயோகப்படுத்தியிருக்கும் விபரங்கள் நன்கு தெரிவிக்கப் பட்டிருக்கிறது. நவீன கால சரித்திரத்தில் மற்றும் அநேக உதாரணங்களை மேன்மேலும் பார்க்கின்றோம். நெருங்கி தற்சமயத்திலோ முற்றுகை என்ற யுத்த சாதனத்தின் நலத்தை மட்டிலுமேயல்லாமல், அதன் நீதி முறைகளையும் அறிய நாம் கட்டாயப்படுத்தப்படுகிறோம். ஆதிகாலத்தில், முற்றுகை என்றால் பகைவர் ஊரையோ கோட்டையையோ நெருங்கி சுற்றி வளைத்துக்கொண்டு, அவருக்கு வெளியிலிருந்து எவ்வித பொருள்களும் உணவுகளும் போகாதபடி தடுப்பதன் மூலம், பகைவருடைய பலத்தை குறைத்து அழித்து பசித்துன்பத் தால் இறக்கவோ அல்லது சரண்புகவோ செய்வதாகயிருந்தது. அந்த ஊரிலோ கோட்டையிலோ இருந்தவர்கள்தான் சண்டை செய்பவர்கள். அவர்கள் என் ணிக்கையும் குறைச்சல். சண்டையில் அகப்பட்டுக்கொண்ட பிரதேசமும் சொல்பமே. இதில் கஷ்டப்படுபவர்கள் சைனியத்தைச் சேர்ந்தவர்கள், அல்லா தவர்கள் என்றபடி அதிக வித்தியாசமும் கிடையாது. ஆகவே சண்டையில் "முற்றுகை" ஆயுதப்பிரயோகத்தின் தர்மாதர்மங்களை ஆக்ஷேபித்து கேட்க சந்தர்ப்பங்கள் வாய்க்கவில்லை.

இப்பொழுதோ, காலம் முற்றிலும் மாறிவிட்டது. அத்துடன் பழய "முற்று கை"யின் தத்துவமும் மாறிவிட்டது. தற்காலத்து முற்றுகை ஒரு கண்டத்தி லிருந்து மற்றொரு கண்டத்திற்கு உலாவும் பெரிய விஷயம். இதில் ஆண், பெண், குழந்தைகள் எல்லாரும் ஒருங்கே அடிபடுகிறார்கள். பகைவர்களைவிட இதில் நமக்கு முக்கியவிஷயமென்னவென்றால், சென்ற பெரிய உலக யுத்த காலமுதல் இங்கிலாந்தின் கடற்படைத் தத்துவத்தில் முற்றுகையே முக்கிய சாதனமாக ஆகி விட்டது. இந்த வழி பிரிடனுக்குமட்டுமே சாத்தியம். அதற்கே உலகத்தின் கடல் ஆதிக்கம் பூராவும் இருந்துகொண்டிருக்கிறது. வெளி நாடுகளின் வியாபார பயிரங்க வழிகள் கிளை வழிகள் எல்லாம் பிரிடனின் ஆதிக்கத்திற்குள் அடக்கம். இந்தக் கடல்ஆதிக்கத்தின்மூலம் தன் தேசத்திலும் தன் சாம்ராஜ்ஜிய நாடுகளிலு முள்ள சைனியங்களுக்கோ இதர ஜனங்களுக்கோ தடைப்படாது பொருள்களும் உணவுகளும் கொடுக்க சக்தியுடையதாகயிருக்கிறது. இதே டயத்தில், பகைவர் நாட்டிற்கோ அல்லது அவர் வசப்பட்ட நாட்டிற்கோ வெளியிலிருந்து எவ்வித பொருளாதாரமும் கிடைக்காதபடி தடுத்துவரவும் சாத்தியமாகிறது. வாஸ்த வத்தில் ஐரோப்பா கண்டத்தில் ஏராளமாக நடந்துவந்த கடல் வியாபாரம்

முற்றிலும் சொல்பமாக விழுந்துபோய், ஜெர்மானியர் இதாலியர் இவர்களுக்குள் அடங்கிய பிரதேசங்கள் பூராவிலும் இப்பொழுது பொருளாதார நெருக்கடியும் குறைவும் ஏற்படச்செய்திருக்கிறது.

முற்றுகையின் ஸாரம்.

ஆகவே தற்கால முற்றுகையின் உத்தேசம் இரண்டுவிதமாகும். யுத்த தளவாடங்கள், எண்ணெய், உணவுப்பொருள்கள் இவைகளின் போக்குவரத்தைத்தடுப்பதின் மூலம் எதிரியின் சண்டைக் கருவிகளுக்கு நேர் சங்கடங்கள் உண்டாக்கச் செய்வது ஒன்றாகும்; இரண்டாவதாக பொருளாதார நெருக்கடியும், உணவுக் குறைவும் ஏற்படுவதுமூலம் எதிரிக்கு பொதுவாக மனச் சங்கடமும், வலுவின்மையும் மறைமுகமாக ஏற்படச் செய்கிறது. இந்தவிதம் முற்றுகையை தளரவிடாமல் போட்டுவருவதால் எதிரியை நாளடைவில் கட்டாயமாய் பலஹீனப்படுத்தச் செய்யும். வால்டர்ஹில் என்பவர் சொல்லுவதாவது :—" பகைவரின் உணவுக்களஞ்சியங்களையும் ஆயுதசாலைகளையும் நிறப்பமுடியாமலடிப்பதால் எதிரி நிலைத்து எதிர்க்கும் சக்தியை வேரறுக்கவே இந்த முற்றுகை என்ற ஆயுதம் நிர்மாணம் பண்ணப்பட்டிருக்கிறது. எதிரி ஏராளமாக சேகரிப்பு செய்திருந்தால் இது சற்று மெதுவாக வேலைசெய்யும். ஆனால் முடிவில் பகைவரை ஜயிக்க இது முக்கிய சாதனமாகும்." இந்த முற்றுகையின் பலவித சிற்பத்தை இந்த வியாஸத்தின் பின்பாகத்தில விரித்துரைக்க நான் எண்ணியிருக்கிறேன்.

முற்றுகை போடுவதின் கஷ்டங்கள்.

பிரிடன் போடுவதுபோல் " நெடுந்தூர முற்றுகை " உபயோகப்படுத்த நேரிடும் எந்த தேசத்திற்கும் மகத்தான பலவித கஷ்டங்களுண்டு. இது சம்பந்தமாய் ஒரு மேற்கோள் சொலல அனுமதியுங்கள். "முதலில், தற்காலம் அமுலில் இருந்துவரும் தேசாசார சட்டங்களுக்கு அகாரணமாய் விரோதப்படாமல் பகைவரின் யுத்த சாதனப்பொருள்களின் போக்கு வரத்தை நிறுத்துவதின்மூலம் சட்ட பூர்வமாயும், ராஜரீக வழியிலும், நீதிவிஷயமாகவும் ஏற்படும் பிரச்னை என்ன, இதுவும் நடுநிலைமை வாய்ந்த தேசங்களின் வியாபாரமும் வரத்து சரக்குகளும் பாதிக்கப்படுமாதலால் அவர்களுடைய விரோதத்தை உண்டாக்கிக்கொள்ளாமல் செய்ய நேரிடுகிறது. இரண்டாவதாக, இந்த தூரதேச முற்றுகையின் வரம்பிற்குள் அகப்பட்ட நாடுகளில், அனுப்பப்பட்ட சாமான்கள் பகைவர் நாட்டிற்சென்றும், நடுநிலைமை வாய்ந்த நாட்டிற்கென்றும் சீக்கிரமாகவும் நம்பிக்கையாகவும் பிரித்து விஷயங்களை நடத்தச் செய்யும் பிரச்னையும் இருந்தவருகிறது." தவிர இம்முற்றுகை தேசங்களின் பட்டாளமில்லாத இதர அமரிக்கையுள்ள பொது மக்களின் வாழ்க்கைக்கு மிகுந்த கலவரத்தை கட்டாயமாய் உண்டாக்குவதுடன், சில சமயங்களில் அவர்களின் தேக சௌக்கியத்திற்கும் உயிருக்குமே பெரும் ஆபத்தையும் உண்டாக்கச்செய்யவோ அல்லது எதிர்பாராதபடி துன்பத்தை உற்பத்தி செய்வதோ நிச்சயமாகயிருக்கிறது.

சென்ற உலக யுத்தத்தில், அமரிக்கையுள்ள பொது ஜனங்களுக்குச் சேர வேண்டிய உணவுப் பொருள்களேயும், இந்தனத்தையும், துணிகளேயும் மறிக்கச் செய்யவோ அல்லது குழந்தைகள், ஸ்திரீகள், வயோதிகர்கள், வியாதியஸ்தர்கள் இவர்களுக்கு, சாதாரணமாய் வழங்கப்படும் உணவுப் பொருள்களே யுத்த மறிப்பு சாமான்களாக அறிவிப்பதுமூலம், கஷ்டமும், பசிப்பிணியும் உண்டாக்கவோ, பாத்தியமில்லே என்று, தாங்கள் கருதுவதாக, ஸோவியத் ராஜாங்கமும், சில சமயங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனுக்கு ஆக்ஷேபணேக் கடிதங்கள் திரும்பத்திரும்ப எழுதியனுப்ப செய்திருக்கிறது. இத்தியாதிய கஷ்டங்களே நிவர்த்திக்க வழிதேடுவதில்தான் முற்றுகை சம்பந்தமாய் நீதி நூல்களே ஆராய்ந்து பார்க்கவேண்டிவருகிறது. யுத்த காலங்களிலும், முக்கியமாய் இப்போது நடக்கும் மகத்தான போர் சம்பந்தப்பட்டமட்டிலும், அறநூலேயும் பிரயோஜனத்தையும் ஒருமுகமாக சீர்தூக்கிப் பார்ப்பது சிரமமான காரியமே.

அறநூலின் பிரச்னே.

பகைவர் தேசத்தின் பட்டாள ஜனங்களுக்கோ அல்லது பொது ஜனமக்களுக்கோ தேவையான சாமான்களேத் தடுக்கச் செய்வது, தேசாசார சட்டத்திற்கு விரோதமில்லே என்ற விஷயம் முதலெடுப்பிலேயே சொல்லிவிடலாம். ரஸாயன சாஸ்திரப்பயிற்சி ஓங்கி வளர்ந்திருக்கும் இக்காலத்தில், இந்த அனுமதி மிகவும் அவசியமாகும். உணவுப்பொருள்களென்ன, துணிகளென்ன, மற்றும் பார்வைக்கு கொஞ்சமும் அபாயமில்லாத வஸ்துக்கள் என்ன, இவைகளிலிருந்து சுலபமாய் கொடிய யுத்தத் தளவாடங்களேச் செய்துவிடுகிறார்கள். உதாரணமாக, பாலிலிருந்து ஆகாய விமானமும், உருளேக் கிழங்கிலிருந்து மதுசாரமும், வெண்ணெயிலிருந்து வெடிகுண்டுகளுமாகும். "எக்காலத்திலும் சட்டபூர்வமான விவாத அம்சம் யுத்த நாடுகளுக்குள் இரக்கத்தைப்பற்றியதேயில்லே. நடுநிலேமை வாய்ந்த தேசங்களின் பாத்தியங்களேயும், பொறுப்புகளேயும் பற்றியேயாகும்."

சரியான முற்றுகைமூலம் எதிரி நாட்டின் போக்குவரத்தை நிறுத்தச் செய்யும் பாத்தியம் ஒவ்வொரு தேசத்திற்கும் சுதந்தரமாகவுள்ளது. ஆனல், இந்தச் சண்டையில் யுத்த நாடுகளுக்குள் பூர்ண முற்றுகையென்பது சாத்தியமில்லாத விஷயம். இருந்தாலும், முழுமுற்றுகை சம்பந்தமான பிரச்னேகளே சர்ச்சை செய்து, சிறிய பெரிய முற்றுகைச் சட்டங்கள் வாஸ்தவத்தில் அனுமதிப்பதை விட ஜாஸ்தி அனுதாபமுள்ளதும், யுத்தத்தில் சரியானபடி பிரயோஜனப்படக் கூடியதுமான ஒரு ஆயுதமாக அதை சீர்படுத்துவதற்கு வழி இருக்கிறதா என்பதை கவனிப்போம்.

முந்திய வழிகள்.

பட்டாளத்திற்கும், அது அல்லாத மற்றப் பொது மக்களுக்கும் கொடுக்கக் கூடிய பொருள்களே வித்தியாஸப்படுத்துவதுமூலம், முதலில் எல்லா சாமான்களேயும் மூன்று வகைகளாகப் பிரிக்கச் செய்தார்கள். இவைகள் "முற்றிலும் நிஷேதிக்கப்படவை", "ஒருவாறு நிஷேதிக்கப்பட்டவை", "நிஷேதிக்கப்

படாதவை" என்றதாகும். ஆகவே சரக்குகளின் இத்தன்மையை அனுசரித்தும், அவைகள் அனுப்பப்பட்ட காரியங்களை அனுசரித்தும் முற்றுகையின் வேலை நடத்தப்பட்டுவந்தது. 'இரக்கத்தால்' தூண்டப்பட்ட குணதோஷ விசாரகர்கள், பெரிய யுத்தத்தில் மேற்கண்ட பிரிவினைகள் விவேசனமில்லாத முற்றுகையின் அபகுணங்களைத் திருப்திகரமாக ஒழித்துவிடுமென்று நினைத்தார்கள். சென்ற 1900-ம் வருஷம் நடந்த தென் ஆப்பிரிக்கா சண்டையில், லார்டு சாலிஸ்பரி "பகைவர் தேசத்திற்கு அனுப்பப்படும் உணவுப்பொருள்கள், எதிரியின் பட்டாளத்திற்கு உபயோகப்படுத்துவதாகயிருந்தால் மட்டுமே, அவைகளை யுத்தமறுப்பு சாமான்களாகக் கருதப்படும். அனுப்பப்பட்ட சாமான்கள் சைனியங்களுக்கும் உபயோகப்படுத்தமுடியும் என்றால் போதாது. சாமான்களைப் பிடிக்கும்காலத்தில், எதிரி சைனியங்களின் உபயோகத்தைக் குறித்தே அனுப்பப்பட்டதென்று காண்பிவிக்கவேண்டும்" என்ற வகைக்கு உத்தரவு போடச் செய்திருந்தார். இந்த அறிவிப்பைச் சுட்டிக்காட்டி சென்ற 1914-ம் வருஷக் கடைசியில், ஐக்கிய நாடுகள் பிரிடனுக்கு ஆக்ஷேபணை நிருபங்களில் ஒன்றை எழுதியிருந்தார்கள். இதை தற்காலத்தில் ஜெர்மன் பிரசாரகர்கள் தங்களுக்குவேண்டியபடி உபயோகப்படுத்திவருகிறார்கள் என்பதை நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது எதிரிகளுக்கு ஒப்புக்கொள்ள சௌகரியப்படாதபோனாலும், 1900-ம் வருஷத்தில் லார்டு சாலிஸ்பரி சொன்ன விஷயங்கள் தற்கால நடவடிக்கைகளுக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லையென்பதை எல்லா தேசத்தார்களும் தங்கள் கசந்த அனுபோகத்தின்மூலம் அறியச் செய்திருக்கிறார்கள். தற்காலச் சண்டை "முழு" சண்டையாகும். இதில், செம்படவர்கள், துறைமுக விளக்கு காப்போர்கள், ஆஸ்பத்திரி தாதிகள், மாதாக்கோவில் பூஜகர்கள் இவர்கள் எல்லோரும் நியாயப்படி தாக்கப்படும் வஸ்துக்களாக ஆவார்கள். பட்டினி, நோய், பயத்தால் உண்டாக்கப்பட்ட தளர்ச்சி இவைகள் சண்டையில் உபயோகிக்கக்கூடிய சரியான ஆயுதங்கள். இந்த விஷயங்களை உலகத்தார் 25-வருஷங்களுக்குமுன் ஜெர்மானியர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். இப்பொழுது நடக்கும் மஹா யுத்தத்தில், உணவுப்பொருள்கள் வகையரா சம்பந்தமாக ஏற்பட்ட யுத்த மறுப்புகளின் வித்தியாஸம் முழு மறுப்பு, ஒருவாறு மறுப்பு என்று சொல்லும் விஷயங்கள் முற்றிலும் பிரயோஜனமற்றதாகப்போய்விட்டது. "எந்தந்த பொருள்கள் எதிரியின் சைனியத்திற்கு யுத்த தளவாடமாக ஒத்தாசை அளிக்கிறதோ அவைகளை சண்டை நாடுகள் தடை செய்யலாம் என்ற ஒரு முக்கிய அம்சமே மறுப்பின் கொள்கையை இப்பொழுது கையாண்டுவருகிறது" என்று புரொபஸர் ஸி. ஸி. ஹைடு கூறுகிறார். யுத்த நியமங்களின் இதர அம்சங்களின் மாறுதல்களை சீர்தூக்கிப்பார்க்கின், ஜீவகாருண்ய வழிகளிலிருந்து இதில் சொல்பமே விலக்கு ஏற்பட்டிருப்பதாக அறியக்கூடும்.

கடற் சீட்டு முறை.

ஆகவே, ஒரு வல்லமையுள்ள ஆயுதத்தை பூர்த்திசெய்யவே, பிரிடன் தன் நோக்கத்தை செலுத்தியது. முற்றுகைபோடுதலின் தத்துவம் ஒரு பாகம் கடல் ஆதிக்கத்தைப்பொருத்தும், மற்றபாகங்கள் பொருளாதாரத்தையும், ராஜீய

தந்திரங்களையும் பொருத்ததாகயிருக்கிறது. நாம் முதலில் கடல் வழிகளை இடைவிடாமல் ரோந்து சுற்றச்செய்தும், ஒவ்வொரு கப்பலையும் சோதிப்பது மூலமும் முற்றுகை உடைபடாமல் காப்பாற்ற முயற்சித்தோம். இதே காலத்தில், எதிரிக்குப் பொருள்கள் போகாதபடி காத்துக்கொண்டால் நடுநிலைமை நாடுகளுக்கு வேண்டியபடி பொருள்கள் போய்ச்சேரும்படி ஏற்பாடுகள் செய்யவும் முயற்சித்தோம். ஆனால், நடப்பில் கணக்கில் அடங்காதபடி அவ்வளவு கஷ்டங்கள் இதில் ஏற்பட்டது மூலம், முற்றுகை எவ்வளவு சரியாக வேலைசெய்ய வேண்டுமோ அந்தவிதம் நடக்கமுடியாதபடி போய்விட்டது. இந்த சண்டையின் ஆரம்பகாலங்களில், பொருள்கள் ஜெர்மனிக்கு இதாலி மூலம் குழாய்வைத்தது போல் சென்றுகொண்டிருந்தது; மற்ற நடுநிலைமை நாடுகளும், தங்கள் பிரதேசங்களிலிருந்த ஜெர்மன் வியாபாரிகளின் காரியங்களை அடக்கமுடியாமலிருந்து வந்தார்கள்.

மனதிற்கு சமாதானமில்லாத இப்போர்க்கொத்த சங்கடங்களை நிவர்த்திக்கவே, "கடற் சீட்டு முறை" என்ற பெயரிடப்பட்ட புதிய சிற்பத்தை கைக்கொள்ளப்பட்டது. இதன் மூலம், ஐரோப்பிய சமுத்திர மத்தியபிரதேசங்களில் கப்பல்களை விடச்செய்து, அவைகளை நிறுத்தி, சோதித்து, தடுக்கப்பட்டபொருள்களிருந்தால் அவைகளை பரிகரிக்கசெய்கிறதென்பதற்கு, பதிலாக பிரிட்டிஷாரின் வழி என்னவென்றால், ஒவ்வொரு கப்பலும் தங்கள் பிரயாணங்களைத் தடைபடாமல் முடிக்க விரும்பினால், தான் கொண்டுபோகும் சாமான்கள் இன்னவைகளென்று உத்தியோகஸ்தர்களுக்கு முன் அறிக்கைசெய்யாமல் முற்றுகை பிராஞ்சியத்தை நோக்கிச் செல்லாதவண்ணம், அது புறப்படும் துறைமுகத்திலேயுள்ள ஸ்தானீக அதிகாரிகளிடமிருந்து "கடற் சீட்டுகள்" வாங்கி எடுத்துக் கொண்டுபோவது கட்டாயமாகும். இந்தவிதம், முற்றுகையை ஏமாற்றச்செய்வது மிகவும் கடினமாகி விட்டதுடன், அதேகாலத்தில் இந்த ஏற்பாடு நடுநிலைமை வகித்த நாடுகளுடன் ஒழுங்காக செய்யப்படும் வியாபாரத்திற்கு மிகவும் ஒத்தாசையை அளிக்கச்செய்கின்றது. ஏனென்றால் நாணயமுள்ள வியாபாரி தன்னுடைய சரக்குகளை கப்பலில் ஏற்றவோ, கடற் சீட்டுபெற்று தான் போய் சேரவேண்டிய இடத்திற்கு போகவோ தடையன்னியில் அனுமதிக்கப்படுகிறார்.

உள்கருத்து.

அநேகவிதமான கஷ்டங்களையும் பொருள்படுத்தாமல், மனச்சாட்சியையும் காரியசித்தியையும் உத்தேசித்து பிரிட்டிஷாரின் கொள்கை நடுநிலைமை கொண்ட நாடுகளின் ஜனங்களுக்கும், எதிரி நாடுகளிலும், அவர் ஆக்கிரமித்த நாடுகளிலும், உள்ள பட்டாளத்தில் சேராத பொது ஜனங்களுக்கும் சௌகர்யம் செய்ய முக்கிய எண்ணம்கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது. தேசப்பாதுகாப்பையும் சீக்கிரம் ஜயத்தையும் உத்தேசித்து, நல்ல எண்ணமுள்ள எல்லாருக்கும், மிகவும் கண்டிப்பான பொருளாதார அடக்குமுறை முதல் கவனமாகயிருக்கவேண்டும் என்பதுடன், இந்த உத்தேசம் தடைபடுவதாகயிருந்தால், அறநூல்வழிகள் இரண்டாவது இடத்தையே அடையவேண்டுமென்றும் சொல்லச்செய்கிறார்கள்.

இந்த மகாப்பெரிய யுத்தத்தில் பகைவன் முரடனாகவும், வஞ்சகனாகவும், தன்வழிகளில் இரக்கமற்றவனாகவுமிருப்பதால், சண்டை ஜயிக்கவேண்டிய அவசியமே முதல் கருத்தாக இருக்கச்செய்கிறது. ஆகவே பிரிடிஷ்காரர்கள் காரியம் சித்திக்கவேண்டிய நயத்தையும் தயாளத்வத்தையும் ஒரே திராசுத்தட்டில் வைத்து நிறுக்கமுயலுவதை அநேகர்கள் நேர்முகமாக ஆக்ஷேபித்து பேசுகிறார்கள். கேவலம் ராணுவமுறையிலிருந்து நோக்குமின், முற்றுகை எவ்வளவுக்கெவ்வளவு பூராவும் போடப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஜயமுடிவு சமீபித்துவிட்டதாகக்கருதலாம். ஒரு நடுநிலைமைநாடு முற்றுகையின் விதிகளை புறக்கணித்துத் திருட்டுத்தனமாய் சண்டை நாடுகளுக்கு பொருள்களை மாற்றச் செய்தால், பின்னிட்டு முற்றுகைமூலம் மறுப்பில்லாப்பண்டங்கள்கூட தடைபட்டு விட்டதாக புகார்களை சொல்ல அதற்கு இடமில்லை. இங்கிலாந்துக்கு ஒரு நடுநிலைமைநாட்டின் வாஸ்தவ வியாபாரத்தேவைகளைத்தேக்க எவ்வித ஐதம் பரியமும் கிடையாது. மற்றபடி பகைவரினும், பகைவர்வசப்பட்ட நாடுகளிலுமுள்ள ராணுவபற்றில்லாத ஜனங்களின்கதி, அந்நாடுகளிலிருந்துவரும் ராஜாங்கங்களை பொருத்ததேயாகும். மேற்படி ராஜாங்கங்கள சொந்தமாகயிருந்தாலும் அன்னியமானதாகயிருந்தாலும் அந்த ஜனங்களுக்கு உணவுகொடுப்பதும் காப்பாற்றிவருவதும் இவர்கள் கடமையாகும். இவர்கள் "யுத்த நிலைமை" என்ற ஒரு துர்பாக்கியத்தின் சகஜபலிகளாகயிருப்பது துரதிர்ஷ்டமேதவிர வேறல்ல.

ஒரு உவமானமும் பேதமும்.

நாம் ஜாஸ்தி விஸ்திரிக்கவோ அல்லது உணர்ச்சியற்றிருக்கவோ, நினைக்கவில்லை. அதிக கோளார் சொல்லுவதும் அல்லது மனோவிகாரமுள்ளவர்களுமான அநேக ஜனங்கள், ஒருபாபமும் அறியாத பேதைகள்படும் அனுவசியமான இந்தக் கஷ்டங்களை எவ்விதமாவது நிவாரணம் செய்யவேண்டுமென்று மனச்சாட்சிபூர்வமாய் அறிந்து சொல்லுகிறார்கள். மாஜி ஜனாதிபதி ஹூவர் யோசனையை அநேகர்கள் ஆமோதிக்கச் செய்கிறார்கள். அதன்படி அமெரிக்காவிலிருந்துவரும் உணவு கப்பல்களுக்கு தடையின்றி வழிகொடுத்து அவ்வுணவுப் பொருள்களை "பகைவர் வசமிருக்கும்" நேசநாடுகளின் யுக்தமான ஜனங்களுக்கு பங்கிட்டுக்கொடுக்க வேண்டுமென்பதுதான். ஆனால், நாம் இந்த தரும யோசனையை ஆமோதிக்கு முன், அதை வெகு கவனமாக சீர்தூக்கிப்பார்க்கவேண்டும். முதலெடுப்பில் இது அவசியம்தானா என்றும், ஏனென்றால் ஜெர்மன் அறிக்கையுள்பட பொதுவாக எல்லோரும் இதில் ஒக்குமத்து இல்லாததாலும், இரண்டாவதாக, ஜெர்மனியைப் போன்ற பகைவனுடன் நாம் நடவடிக்கை செய்யவேண்டியிருப்பதால், பட்டாளத்திற்சேராத பொதுஜனமக்களுக்கே இவ்வாகாரப் பொருள்கள் போய்ச்சேருவதற்கு வேண்டிய ஜாமீன் என்ன இருக்கக்கூடுமென்பதையும் கவனிக்கவேண்டும்? மேலும், ராணுவத்தில் சேராத அநேகம் பேர்கள் ஜெர்மன் பொருள் உற்பத்தி சாலைகளில் கட்டாய வேலைகளில் அமர்த்தப்பட்ட கூட்டத்தினர்கள் ஆகிறார்கள். மற்றும், நமக்கே ஒரு கேள்வியை நாம் போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது, ஜெர்மனி ஆகாய விமான எதிர்ப்பு குண்டெறிதல் மூலம் ராணுவமல்லாத பொதுஜனங்களுக்கும், முன் எச்சரிக்கையில்லாமல் நீர்மூழ்கிகளை

(U. Boats) கொண்டு கப்பல்களை கவிழ்ப்பதாலும் ஏற்படுத்தும் சூழ்ச்சியுள்ள அக்கிரம சேதங்களை இந்த முற்றுகையின் செயல்களுடன் ஒத்துப்பார்ப்பின், முற்றுகை ஒரு கெடுதலான ஆயுதமாகக்கூடக் கருதயிடமில்லை.

பக்ஷபாதமில்லாதபடி நாம் யோசித்துப்பார்த்தால், பிரிடன் ராணுவமல்லாத ஜனங்கள் சம்பந்தமாய் முற்றுகையை உபயோகப்படுத்த நேரிடுவதற்கு மிகவும் வருந்தச்செய்கிறது. "ஜெர்மன் பிரசாரகர்கள் நடுநிலைமை நாடுகளை கவனிக்கும் அவசியத்தை பெரிதாகக்காட்டி இதன் மூலம் பிரட்டான வழிகளுக்கு ஏற்பாடுசெய்து வருகிறார்கள் என்பது பிரிடனுக்கு நன்றாகத்தெரிந்ததே. ஆனால், பிரிடன் முற்றிலும் நியாயமாய் அபிப்பிராயப்படுவதாவது, எப்பொழுது ஜெர்மனி தங்களால் ஜயிக்கப்பட்ட அநேக தேசங்களின் ஆளுகையை தாங்களே ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறதோ, அப்பொழுது அந்நாடுகளை சரியானபடி காப்பாற்றி வரும் பொறுப்பு ஜெர்மனியையே முற்றிலும் சார்ந்ததாகும் என்று வற்புறுத்துவது தான். ஜெர்மனி கிடைக்கும் உணவுப்பொருள்களின் மேன்பாதியை பயிரங்கமாய் திருடி தன் சேனைக்கு கொடுக்கச்செய்தும், யுத்த தளவாடங்களை செய்வதற்கும் தலைப்படாமலிருந்தால் எல்லா நாடுகளும் காப்பாற்றப்படலாமென்பதில் தடையில்லை. முடிவாக முற்றுகையை சரிவரப்போடச் செய்வதுமூல்யமாய் யுத்தத்தை முடிக்கச்செய்யும் பெரிய ஆவலிருப்பதால், பிரிடன் இந்த ஆவலை மேற்கொண்டு சீக்கிரம் காரியசித்திபெறக்கூடிய முக்கிய கருவியையே உபயோகப்படுத்தச் செய்கிறது.

முடிவுரை.

ஆகவே நாம் முடிவாக ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளலாம். அதாவது காரியசித்தியை பாதிக்கும்படியான எந்த நீதி நூல்களோ மனப்பான்மையோ எப்பொழுதும் அனுமதிக்கக்கூடியவைகளல்ல. இதுவும் முக்கியமாய் நம்மோடு போராடச்செய்யும் எதிரி நிஜத்தை கொஞ்சமும் பொருள்படுத்தாதவனாகவும், மனச்சாக்ஷியால் இடர்படாதவனாகவும், ஒருநீதிக்கும் சட்டத்திற்கும் கட்டுப்படாதவனாகவுமிருப்பதால், முன் ஜாக்கிரதை மெத்த அவசியமாகும். நமது எதிரிக்கு காரியத்தின் முடிவை ஒத்துத்தான் வழிகளின் நியாயம் போகின்றது. எதிரியிடம் இரக்கம் பச்சாதாபம் போன்ற நல்ல குணங்களுக்கு இருப்பிடமே கிடையாது. ஐரோப்பா இதுவரை பார்த்திராத கொடுஞ்செய்கைகளாலும், அடாது செய்து வரும் ஹிம்ஸைகளாலுமே ஹிட்லர் தன்னுடைய ஆளுகையை செலுத்திவருகிறான். மத்திய காலத்தின் இருண்ட நாட்களில் நிகழ்ந்த கொடிய சம்பவங்கள் எதுவும்கூட இப்பொழுது ஹிட்லர் செய்துவரும் அட்டூழியத்திற்கும் வெருக்கத்தக்க கொடுமைக்கும் ஈடாகாது. தன் நாட்டின் மேன்மை தன்னிடமேயிருப்பதாகச்சொல்லும் கொள்கையை ஒப்புக்கொள்ள மறுக்கும் கௌரவப்பட்ட ஆண்பெண்களை படுத்தச் செய்யும் கொலைபாதகச்செயல்களுக்கு நிகரேயில்லை. மிஸ்டர் ஹென்றி W. நெவின்ஸன் என்பவர் ஜெர்மனியிருந்துவரும் நிலைமையைப்பற்றி பொருத்தமாக "ஒரு காலத்தில் "கெய்ஸரை ஐரோப்பாவின் வெறிநாய்" என்று சொல்லிவந்தோம்.

ஹிட்லரோ, வெறிநாயினும் கெடுகெட்ட வெறிநாயாய், ஜாஸ்தி வெறிபிடித்ததாகவும் மேன்மேலும் அழுக்காகவும், தன்னுடைய தாடைகளிலிருந்து மிகவும் கொடிய விஷங்களை கக்கிக்கொண்டும் இருக்கிறார்'' என்று எழுதச்செய்கிறார்.

நாஸி வழிகள் அநேகத்தை பிரிடன் ஒருக்காலும் தடைசெய்யாது. ஆனால் ஹிட்லரால் விடுக்கப்படும் நாஸிவழிகளுக்கு விரோதமாய் பிரயோகிக்கச்செய்யும் எந்த பொருத்தமான ஆயுதத்தையும் ஆக்ஷேபித்து யாரால் நாணயமாய் பிரிடன் பேரில் குறைகள் சொல்லமுடியும். இப்பேர்பட்ட ஆயுதங்களுக்குள் நமது ''முற்றுகை'' ஒன்றாகும்.

வார யுத்தச் செய்திகள்.

(13—3—41 லிருந்து 19—3—41 வரை).

பிரிடனுக்கு-சகாய-சட்டம்.—பிரிடனுக்குச் சகாயம்செய்ய சட்டமேற்படுத்தியதற்காக, மார்ச்சு 12-ம் தேதியன்று, காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில், யுனைடெட் ஸ்டேட்ஸாருக்கு வந்தனமளித்தார். அப்பொழுது இந்தச் சட்டமானது ஒரு புதிய ஸ்வதந்திரப் பட்டமென்றும், உத்ஸாகத்தையளிக்கக்கூடிய மதக்கோட்பாடென்றும் வர்ணித்து, இதனால், நாஸிதத்துவமழிந்துபோகப் போவதோடு, சிறு பெரு தேசங்களெல்லாம் இனி நிர்ப்பயமாய் ஸ்வதந்திரத்தோடு வாழ இடங்கொடுத்துவிட்டதாகவும், ஜனநாயக நாடுகளின் கடமையானது நாகரீகத்தை வளர்ப்பதோடு, ஜனநாயகத்துக்கு வரும் விபத்துக்களையும் தீர்க்கவேண்டுமென்று அமெரிக்கா நிரூபித்து வழி காட்டிவிட்டதாகவும் புகழ்ந்தார்.

ஒரு துருக்கிப் பத்திரிகை சொல்லியபடி மார்ச்சு 15-ம் தேதி அச்சுநாடுகளுக்கு ஒரு கரிநாளாயிற்று. அன்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் இந்த சட்டத்திலிருந்து, அமெரிக்கா முழு உதவியையும் செய்யுமென்றும், யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள 1,300 லக்ஷம் ஜனங்களும், ஜனநாயகத்துக்கேற்பட்டிருக்கும் விபத்தைத் தீர்க்க முழு மனதோடு சேர்ந்து நிற்பதற்கு அறிகுறியென்றும், இனி கொடுங்கோல் செலுத்தும் அதிகாரிகளோடு சமாதானப்பேச்சு கிடையாதென்றும், அமெரிக்காவில் செய்யும் யுத்த தளவாடங்களெல்லாம் போர்முனைக்கனுப்பப்படுமென்றும் எடுத்துக்காட்டினார். இனி, தளவாடங்களும் வெகு துரிதமாய் உற்பத்தி செய்யப்படும். அதிமேதாவியான சர்ச்சில் மகானுடைய தலைமையின்கீழ் கோடிக்கணக்கான பிரிடிஷ் மக்கள் ஜனநாயகமென்ற தீபத்தை மிருகத்தன்மையுள்ள காட்டுமிராண்டி ஜெர்மானியர்கள் அணைத்துவிடாமல் காப்பாற்றிவருகிறார்கள். 'புது-ஏற்பாடு' என்று நாஸிகள் சொல்லுவதெல்லாம் புதிதுமல்ல; ஏற்பாடுமல்ல. அது ஒரு அபிப்பிராயம்தான். அதை ஒழிக்கவே அமெரிக்கர்கள் இந்த சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இவர்களுடைய புகழ் சரித்திரத்தில் வரையப்படும்.

இந்தச் சட்டத்தை ஏற்படுத்தியதிலிருந்து, அமெரிக்காவானது ஹிட்லர் மேல் படையெடுத்ததுபோலாகும். இனி இரண்டு கக்ஷிக்காரர்களும் ஒரு பக்கமும் ஜயிக்கவில்லையென்று சொல்லிக்கொள்ளமுடியாது. நாஸி கக்ஷி அழிந்த பிறகு தான் யுத்தம் நிற்கும்.

பிரிடனுக்குவேண்டிய கப்பல்கள், உணவுப்பொருள்கள் சம்பந்தமான சகாயத்தை நிர்ணயிக்க ஸர் ஆர்தர் ஸால்டரும், ராபர்ட் ப்ராண்டும் அமெரிக்காவுக்குப் போகிறார்கள்.

மஸ்கிடோ-படகுகளையும், கால-கிரம மதிக்கப்பட்ட நாசகாரிகளையும் கொடுத்து, பின்னும் நீர்மூழ்கிகளை எதிர்க்க யுத்தக்கப்பல்களையும், சரக்குகளை ஏற்றிச்செல்ல வியாபாரக் கப்பல்களையும் அமெரிக்கா கொடுத்துதவுமென்று சொல்லப்படுகிறது.

விமானப்போர்.—வஸந்தகாலம் வந்துவிட்டதால் பிரிடன் விமானப்போர் துவக்கி, ஜெர்மனியில் பெர்லின், ஹாம்பர்க், பிரெமன், கெல்ஸன்கர்ஷன், டஸல்-டார்ப் முதலிய இடங்களைத் தாக்கிற்று. விமான இலாகா வரவு, செலவு திட்டத்தை காமன்ஸ் சபையில் 11-ம் தேதியன்று சமர்ப்பிக்கும்போது ஸர் ஆர்க்கிபால்ட் ஸின்க்ளேர் எடுத்துக்காட்டியபடி பிரிடிஷ் விமானப்படையானது இப்பொழுது அடியோடு புதுப்பிக்கப்பட்டுவிட்டது. போபர்ட், ஹாலிபாக்ஸ், வர்ல்விண்ட் என்ற புது விமானங்கள் கட்டப்பட்டதோடு, பழைய விமானங்களும் புது மாதிரியாக திருத்தியமைக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது எண்ணிக்கையிலும், யந்திரத்திலும், பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் விமானப்படைக்கு மேலாய்விட்டது. அதற்கு ஜயமும் கிடைத்துவிட்டது. அதன் பிரயத்தனத்தால் பிரிடனே பாதுகாக்கப்பட்டு, இதாலியின் சாம்ராஜ்ஜியமும் அழிக்கப்பட்டது. மேலும், கனடா, ஆஸ்திரேலியா, தென்-ஆபிரிக்கா, நியூஸிலாண்ட், ரொடீஷியா, இந்தியா, நியூ-பவுண்ட்லாண்ட், போலண்ட், ஸெகோஸ்லவோகியா, ஹாலண்ட், பிரீ-பிரான்ஸ், பெல்ஜியம், நார்வே தேசங்களுடைய விமான பலமும் சேர்ந்திருக்கிறது. இதன் சாமர்த்தியத்தால் 1,680 முறை ஜெர்மனியைப் படையெடுத்து, 4,250 ஜெர்மன், 1,100 இதாலிய, விமானங்களையும் அழித்துவிட்டது.

அட்லாண்டிக் யுத்தம்.—அமெரிக்காவிலிருந்து பிரிடனுக்கு சாமான்கள் வருவதைத் தடுக்க கிளைட்ஸைட், மெர்ஸிஸைட் முதலான இடங்களை ஜெர்மன் விமானங்கள் தாக்கின. மார்ச்சு 9-ம் தேதியோடு முடிவான வாரத்தில் 98,732 டன் நிறையுள்ள 25 கப்பல்களையும் ஜெர்மனி அமிழ்த்தியிருக்கிறது. ஆனால், ஹாலிபாக்ஸ் பிரபு சொல்லியிருக்கிறபடி அமெரிக்காவிலிருந்து வரும் சாமான்களில் சிலதான் வராது போயின.

அட்லாண்டிக் யுத்தத்தை நடத்த ஸர் பெர்ஸி நோபிள் தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கடற்கரை விமான இலாகாவின் உதவியைச் சேர்த்துக்கொண்டு போர்செய்து கடற்பாதைகளைப் பாதுகாப்பார்.

கடல் யுத்தம்.—ஜப்பானுக்குச் சொந்தமான டைரையன், கோபெ, யோகஹாமாத் துறைமுகங்களில் பழுதுபார்த்துக்கொண்டு, மெரயனுஸ், காரொலைன்ஸ் தீவுகளில் எண்ணெய், கரி, யெடுத்துக்கொண்டு சில ஜெர்மன் கொள்ளைக்கப்பல்கள் பஸிபிக் சமுத்திரத்தில் ரகஸ்யமாகத் திரிவதாகத்தெரிகிறது.

அல்பேனியா.—இதில் மத்தியபாகத்திலுள்ள டெபெலெதி மலைச்சிகரங்களைப் பிடிப்பதற்காக ஏழு நாட்களாக இதாலி போர்செய்தது. ஆல்பைனிஸ் பெர்ஸாக்ளியாரி, ப்ளாக்-ஷர்ட் படைகளெல்லாம் யுத்தம் செய்தன. கவசம் போத்தியகாரில் ஏறிக்கொண்டு முஸோலினியே நேரில் போரை நடத்தினார். ஆயிரக்கணக்கான வீரர்களைக்கொண்டு முன்னேறப்பார்த்தார். பின்வாங்கும் வீரர்கள் சுட்டுத்தள்ளப்பட்டார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. பழக்கமில்லாத வாலிபர்கள் சண்டைசெய்து 60′×1500′ விஸ்தீரணமுள்ள பள்ளமொன்று அவர்களுடைய சவங்களால் நிறைந்தது. 50,000 இதாலியர்கள் மாண்டும், காயப்பட்டும், சிறைப்பட்டும் நஷ்டமானார்கள். சேனைபதி காவலெரோ அவமானப் படுத்தப்பட்டார். ராஜிநாமா செய்திருக்கலாம்.

ஆபிரிக்காவில் யுத்தம்.

(1) பிரிடிஷ் ஸோமாலிலாண்டின் தலை நகராகிய பேர்பரா மறுபடியும் பிரிடிஷ் வசம் வந்து விட்டது. தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும் பிரிடிஷ் படைகள் விரைவாகச் சென்று இந்த ஊரைப்பிடித்துவிட்டன. சென்ற வருஷம் இதை இதாலி சண்டையில் இறங்கியவுடன் பிடித்துக்கொண்டு, இதிலிருந்து பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமே போய்விட்டதாகச் சொல்லிக்கொண்டது. இப்பொழுது, உண்மையில், இதாலியின் சாம்ராஜ்ஜியத்துக்கே ஆபத்து வந்துவிட்டது. பெர்பரா பிடிபட்டதிலிருந்து அபிஸீனியாவுக்கு இருந்த மற்றொரு பாதையும் அடைபட்டு விட்டது; மேலும், இப்பொழுது அபிஸீனியாதேசம் 13 பக்கங்களிலிருந்து தாக்கப்படுகிறது.

(2) அபிஸீனியாவில், 300 மைல் உள்புறத்திலுள்ள டாகாபர், கூர்மூக்குக்குத் தென்-கிழக்கே, 40 மைலுக்கப்பாலுள்ள அஸோஸா, மேசாவுக்கு 70 மைல் வடக்கேயுள்ள யாவெல்லோ, ஆகிய இந்த ஸ்தானங்களும் பிடிக்கப் பட்டன.

(3) கெரினைப் பிடிக்க யுத்தம் மறுபடியும் திடீரென்று கிளம்பி கொந்தளிக்கிறது. ஆனால், படைகள் எப்பொழுது முன்னேறுமென்று சொல்லுவதற்கில்லை.

பால்கன் நாடுகளின் நிலைமை மாறவில்லை. ஜெர்மனியானது யுகோஸ்லாவியை பலவந்தப் படுத்திக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், அனாக்ரம உடன்படிக்கையைச் செய்துகொள்ளுவதைத் தவிர யுகோஸ்லாவியாவுக்கு மற்றபடி எவ்விதத்திலும் தன் ஸ்வதந்திரத்தைக் கெடுத்துக்கொள்ள இஷ்டமில்லை.

ஸோபியாவிலிருந்து இஸ்டான்பூலுக்கு வந்த பிரிடிஷ் மந்திரியைக் கொல்ல சூழ்ச்சிகள் செய்தது கமிடாஜிஸ் என்ற அமிதக் கக்ஷிக்காரர்களாய் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. உடுப்புப் பெட்டியில் மறைத்து வைத்த வெடியானது இஸ்டான்பூலிலுள்ள பீராபாலஸ் ஹோட்டலில் வெடித்த சமாசாரம் ஞாபகத்தில் இருக்கலாம்.

ஸோபியாவிலிருந்து வெளிவரும்போது போலிஷ், பெல்ஜிய, டச் பிரதிநிதிகள் அவமானப் படுத்தப் பட்டதாகத்தெரிகிறது. இவர்கள் ஊர் விட்டு வெளி வந்தவர்களென்றும், அடைக்கலம் புகுந்தவர்களென்றும் சொல்லப்பட்டு, தங்கள் ஊருக்குப்போனால்மட்டும்தான் அதற்குவேண்டிய உதவியைப் பெறலாமென்றும் சொல்லப்பட்டார்களாம். இதனால் பிரிடிஷ் மந்திரியின் பிரயாணமும் 3 நாள் தாமதப்பட்டது.

ஜெர்மானியர் கைவசமில்லாத பிரான்ஸ்.—புது அமைப்பு என்று பெயரை வைத்துக்கொண்டு, ஆர்மிஸ்டிஸ் வியாஜத்தில் ஒற்றுமைப்பதாகப் பேசிக்கொண்டு, கைவசமில்லாத பிரான்ஸ் பாகமும், அதைச்சேர்ந்த வட-ஆபிரிக்காவும் ஜெர்மானியரால் கொள்ளையடிக்கப்படுகின்றன. உணவுப்பொருள்கள், சாராயம், இறைச்சி, கொழுப்பு, பாஸ்பேட்ஸ், எண்ணெய் முதலியவைகள் ஆபிரிக்காவிலிருந்து மார்ஸெயில்ஸுக்குக் கொண்டுவரப்பட்டு, ஜெர்மனிக்கு அனுப்பப்படுகின்றன. பதிலாக ஜெர்மனி கடிதப்பணத்தை அள்ளிவிடுகிறது. இதற்கு செலாவணி கிடையாது. மேலும், சண்டை விமானங்களையும், சிறு கப்பல்களையும் ஜெர்மனிக்காக பிரான்ஸ் கட்டுவதாகத் தெரிகிறது. இது ஆர்மிஸ்டிஸ் உடன்படிக்கைக்கு விரோதமாகும்.

இது இப்படியிருக்க, பிரிடிஷ் முற்றுகையால் தடைபடாது உணவுப்பொருள்கள் இறக்குமதியாக வேண்டுமென்று பிரான்ஸ் கேட்கிறது. ஜெர்மனியானது இதிலிருந்து பிரிடனோடு சண்டையைக் கிளப்பிவிடப் பார்க்கிறது. விஷி அரசாங்கமோ, அமெரிக்காவின் சலுகையைக்கொண்டு, பிரிடனைச் சம்மதிக்கச் செய்யலாமென்று நினைக்கிறது. பிரிடனோ ஏற்கனவே சலுகை காண்பித்து, ஏராளமான சாமான்கள் மார்ஸெயில்ஸுக்கு வந்து இறங்குகின்றன. ஜெர்மனிக்குப் போகாமல், தாங்களே உபயோகித்துக் கொள்ளுவதாக உறுதி கொடுத்தால் உணவுப்பொருள்கள் வர பிரிடன் சம்மதிக்கலாம். ஆனால், இதுவரையில் உறுதிமொழி கொடுக்கப்படவில்லை. இப்பொழுது கூட 1,250,000 டாலர் பெறுமானமுள்ள உணவு, வஸ்திரம், மருந்துசாமான்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவிலிருந்து பிரான்ஸுக்கு **எக்ஸ்மவுத்** என்ற கப்பல் வந்துகொண்டிருக்கிறது.

டாங்கியரானது பிரெஞ்சு ஆதீனத்துக்குள்பட்ட மொராக்கோ ஸுல்தானல் அவர் சிப்பந்தியாகிய மெண்டோபால் பராமருஷிக்கப்படுகிறது. இப்பொழுது இந்த மெண்டைப் விரட்டிவிட்டு ஜெர்மன் ஏஜண்ட் அவருடைய கட்டடத்தில் வேலைபார்ப்பதாகத் தெரிகிறது. மெண்டோபின் கதி யென்னவென்று தெரியவில்லை. இது பிரான்ஸுக்கு சம்பந்தமான காரியமாயிருந்தாலும், பிரிடனுடைய

பாத்தியங்களும் பாதிக்கப்படுவதாலும், பிரிடனுக்கு டாங்கியரிலிருக்கும் உரிமைகளைப் பாதுகாப்பதாக ஸ்பெயின் உறுதிமொழி கொடுத்திருப்பதாலும், பிரிடன் இதைப்பற்றி விசாரணைகளைச் செய்துவருகிறது.

தூரக்-கீழ்பிரதேசம்.—லாங்வென் விமானத் தொழிற்சாலையானது சைனாவில் இருந்து பர்மாவுக்கு மாற்றப்பட்டிருப்பதாயும், அமெரிக்க விமானங்கள் ரெங்கூனில் இறக்கப்பட்டு, பிறகு சீன விமானிகள் ஓட்டிக்கொண்டுபோவதாயும் ஜப்பான் குற்றம் சாட்டி, இதற்காக, பர்மாவை விமானங்களைக் கொண்டு படையெடுக்கவேண்டுமென்று சொல்லுகிறது. சைனா கவர்ன்மெண்ட் இதெல்லாம் புரட்டென்று மறுக்கிறது. ஜப்பான் சண்டைக்குப்போக இஷ்டப்படவில்லையென்று சொல்லிக்கொண்டாலும் நம்புவதற்கில்லை. அமெரிக்க உதவி பிரிடனுக்கு வரும் க்ஷாத்திரத்தை வைத்துக்கொண்டு, பதிலாக, ஜெர்மனி ஜப்பானைத் தூண்டிவிடலாம். மத்ஸூவோகா பெர்லினுக்குப் போகிறார். இந்தியாவுக்கு பயமில்லையென்று நினைப்பவர்கள் இந்த பயமுறுத்தலைக் கவனிக்கவேண்டும்.

இதாலி.—ஆபிரிக்கா இதாலிய சைனியங்களுக்குத் தலைவராக கிரேஸியானி மறுபடியும் நியமிக்கப்பட்டிருக்கிறார். தேசாபிமானத்தை உத்தேசித்து இவரும் வேலையை ஒப்புக்கொண்டார். இதாலியை விட்டுப் போகுமுன்னர் தன் உயிலையெழுதிவைத்துவிட்டார்.

ஜெர்மனியும் அதற்குட்பட்ட நாடுகளும்.—வீரர்கள் தினக்கொண்டாட்டத்தன்று, ஹிட்லர் வழக்கம்போல் வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையைத் தூஷித்து, யுத்தத்துக்குக் காரணம் பிரிடனென்று பழி சுமத்தினார். முக்கியமாக, இனி வரப்போகும் சண்டையில் ஜெர்மானியர்கள் அநேக தியாகங்களைச் செய்ய நேரிடும் என்று எச்சரித்தார்.

நார்வே ஒரு குடியரசு நாடாகக் கருதப்பட்டு, அங்கிருக்கும் நீர்வீழ்ச்சிகளில் இருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்து, யுத்த தளவாடங்கள் செய்ய யோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

பிரிடன்.—41 வயதிலிருந்து 45 வயதுள்ள ஆண்மக்களும், 20, 21 வயது உள்ள பெண்மக்களும் யுத்த சேவைக்காகக் கணக்கெடுக்கப்படுகிறார்கள்.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
10—3—41. (திங்கட்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—3-தாம் படை யெடுப்புகள்.— இங்கிலீஷ் கால்வாய் (English channel)	......	வெடிச்சத்தமும் தீயும் கிளம்பின.
	ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வ—பிரான்ஸ் (France).	1 விமானம்.	பலத்தசேதம்.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும் படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
10—3—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.— ஹோஹன்ஸாலர்ன் (Hohenzollern) பாலம், தொழிற்சாலைகள் இருக்கும் இடங்கள்.—கொலோன் (Cologne).		பல இடங்களில் தீயும், வெடிகளும் கிளம்பின.
	ஜெர்மன் கடற்படை நிலயம்.—புலாயின் (Boulogne).	......	......
	கப்பல்துறைகள்—செர்பூர்க் (Cherbourg), ப்ரஸ்ட் (Brest).	......	......
	படையெடுப்பு.—வடக்கு பிரான்ஸிலுள்ள (France) விமான நிலயங்கள்.	3 விமானங்கள்.	......
	விமானச் சண்டை.—ஹாலந்தில் (Holland)ல் ஒரு விமான நிலயம்.	......	3 விமானங்கள்.

அல்பேனியா (Albania).

	மோட்டார் வண்டிகள், சைனியங்கள்.—க்ளாவா (Glava) புஸி (Buzi) ரஸ்தா.	......	......
	ஒத்தாசை.—அல்பேனியா (Albania)விலுள்ள கிரேக்க (Greek)சைனியத்திற்கு.	......	......

இதாலிய ஆபிரிக்கா (Africa).

	விரோதி பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—கெரென (Cheren)ச் சுற்றிலும்.	......	தகர்க்கப்பட்டன.
	பாலம்.—கெரென் (Cheren)— அஸ்மாரா (Asmara) ரஸ்தா.	......	......
	பெட்ரோல் கிட்டங்கி.—அஸ்மாரா (Asmara) விற்குத் தென்மேற்கே.	......	தீக்கிரையாகியது.
	தரையிலிருக்கும் விமானங்கள்.—அஸோஸா (Asosa).	நஷ்டமில்லை.	2 விமானங்கள் நாசமாயின.
	துறைமுகக் கட்டடங்கள், கப்பல்கள்.—ட்ரிபோலி (Tripoli).	......	தீயும், வெடிச்சத்தமும் கிளம்பின.
	விரோதி விமான நிலயம்.—ட்ரிபோலிடானியா (Tripolitania).	நஷ்டமில்லை.	தரையிலிருக்கும் 2 விமானங்கள் நாசமாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
10—3—41. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள்.		
	விரோதி விமான நிலயம்.—ரோட்ஸ் (Rhodes), தீவிலிருக்கும் கலாடோ (Calato).	......	தீயும், வெடிச்சத்தமும் கிளம்பிற்று.
	விமான நிலயங்கள்.—மாரிட்ஸா (Maritza), கட்டாவியா (Kattavia).	......	தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசமாயின; எங்கும் தீப்பிடித்தது.
11—3—41. (செவ்வாய்க்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—எண்ணெய்த் தொட்டி—ராட்டர்டாம் (Rotterdam).	......	தீப்பிடித்தது.
	ஒரு ஆலை.—உட்ரெச்டுக் (Utrecht)குச் சமீபத்தில்.	......	......
	இரவில்.—ஜெர்மன் கடற்படை நிலயம், கப்பல்கட்டுமிடங்கள்.—கீல் (Kiel).	......	குண்டுமாரி பொழிந்தது; எங்கும் ஒரே தீயால் சூழப்பட்டது.
	கப்பல்துறை, சாமான் கிட்டங்கிகள்.—ப்ரமர்ஹாவன் (Bremerhaven).	......	சேதமாயின.
	படையெடுப்பு.—வடக்கு பிரான்ஸி (France)லுள்ள விமான நிலயங்கள்.	நஷ்டமில்லை.	3 விமானங்கள்.
	அல்பேனியா (Albania).		
	விமானச் சண்டை.—அல்பேனிய (Albanian) போர்க்களத்தில் நடுப்பகுதியில்.	நஷ்டமில்லை.	5 விமானங்கள்; பல விமானங்கள் சேதமாயின.
	இதாலியத் துருப்புகள், மோட்டார் வண்டிகள்—டெபெலெனி (Tepeleni)க்கு வடக்கே இருக்கும் ரஸ்தா.	......	பலத்த சேதம்.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள்.—ஜிக்ஜிகா (Jig-Jiga)விற்கும், ஹாராரு (Harar)க்கும் மத்தியில்.	......	......

தேதி. பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
11—3—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
விரோதி சைனியங்கள்.—ஹாரார் (Harar).	......	பலருக்குக் காயம்.
ரயில் பாதை.—எரிட்ரியா (Eritrea) ...	......	......
விமான நிலயம்.—ஜிக்ஜிகா (JigJiga) ...	......	......
பாதுகார்த்தல்.—முன்னேறும் பிரிடிஷ் துருப்புகளுக்கு.	......	......
டோடிகானிஸ் (Dodecanese) தீவுகள்.		
பல விமான நிலயங்கள்.—ரோட்ஸ் (Rhodes) தீவு.	...	......
12—3—41. (புதன்கிழமை).		
ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
வீதிகள், ரயில் பாதைகள், ஏரிகள், சைனியங்கள் வசிக்குமிடங்கள்.—பெர்லின் (Berlin).	......	இது வரையில் இந்த யுத்தத்தில் இது தான் பலமான படையெடுப்பு. எங்கும் தீப்பிடித்தது.
தொழிற்சாலைகள் இருக்குமிடங்கள், கட்டடங்கள்.—ப்ரமன் (Bremen).	......	தீயும், வெடிகளும் கிளம்பின.
கப்பற்படையைச் சேர்ந்த கப்பல்களைக் கட்டுமிடங்கள், தொழிற்சாலைகள்.—ஹாம்பர்க் (Hamburg).	......	பலத்தசேதம்; 1 விமானம்.
விமான நிலயங்கள்.-ஹாலந்தி (Holland) லுள்ள ஷிபால் (Schipol), தென் நார்வே (Norway).	......	சேதம்.
ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—வட மேற்கு ஜெர்மனி (Germany) பள்ளத் தாக்குப் பிரதேசங்கள் (Low countries).	......	தீப்பிடித்தன.
கப்பல்துறைகள்.—புலாயின் (Boulogne).	......	......
ஒரு பெரிய சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்.—இஜ்ம்யூடென் (Ijmuiden) துறைமுகம்.	......	......

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
12—3—41. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	இதர கப்பல்கள்.—ஆஸ்டெண்ட் (Ostend).	......	......
	ஜெர்மன் நாசகாரி.—நார்வே (Norway) யிக்கும், டென்மார்க்கு (Denmark) க்கும் மத்தியிலுள்ள ஸ்காகராக் (Skaggerak).	5 விமானங்கள்.	1 நாசகாரி மூழ்கடிக்கப்பட்டது.
	அல்பேனியா (Albania).		
	இதாலியத் துருப்புகள், மோட்டார் வண்டிகள்.—க்ளாவா (Glava), புஸி (Buzi) ரஸ்தா.	......	பலத்த சேதம்.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	தரையிலிருக்கும் விமானங்கள்.—அஸ்மாரா (Asmara).	......	பல சேதமாயின.
	விமான கூடங்கள், பெட்ரோல் தொட்டிகள் டிகாமெரே (Decamere).	......	தீப்பிடித்தன.
	சாமான் ரயில் வண்டிகள்.—கெரென் (Cheren) அஸ்மாரா (Asmara) ரஸ்தா.	......	சேதமாயின.
	ராணுவ முக்கியமுள்ள இடங்கள்.—அஸ்ஸாப் (Assab).	நஷ்டமில்லை.	......
	கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் தங்கும் துறைகள்.—ட்ரிபோலி (Tripoli).	......	தீயும், வெடிகளும் கிளம்பின.
	ரஸ்தா சந்திப்பு, ராணுவ கட்டடம்.—ஸ்லிடன் (Zliten).	......	......
	டோடிகானீஸ் (Dodecanese) தீவுகள்.		
	விமான நிலயங்கள்.--மாரிட்ஸா (Maritza) கலாடோ, கட்டானியா (Kattania).	......	தீப்பிடித்தன.
	ஸ்கார்பாண்டோ (Scarpanto).	......	......
13—3—41. (வியாழக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	பகலில்.—விமானநிலயம்.—கலே (Calais).	......	தரையிலிருக்கும் விமானங்கள் நாசமாயின.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
13—3—41. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	படையெடுப்புகள்.—இங்கிலீஷ் (English) கால்வாய், வடக்கு பிரான்ஸ் (France).	1 விமானம்.	2 விமானங்கள்.
	ஒரு சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்.—நார்வே (Norwegian) கடற்கரை.	......	......
	இரவில்.—கப்பல் கட்டும் துறைகள், கப்பல் நிற்குமிடங்கள். துறைமுகங்கள். சாமான் கிட்டங்கிகள் ஆலைகள்:—ஹாம்பர்க் (Hamburg).	......	எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம், வெடிகளும் கிளம்பின. அதிகச் சேதம்.
	எண்ணெய் சேமித்து வைத்திருக்கும் இடங்கள்.-ராட்டர்டாம் (Rotterdam) ப்ரமன் (Bremen), எம்டன் (Emden).	......	எங்கும் பெரிய தீக்கள் கிளம்பின.
	விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland).	......	......
	ஒரு சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்.—ப்ரிஸியன் (Frisian) தீவுகள்.	6 விமானங்கள்.	மூழ்கடிக்கப்பட்டது.
	அல்பேனியா (Albania).		
	விமானச் சண்டை.—டெபெலேனி (Tepeleni), க்ளிஸுரா (Klissura) ரஸ்தா.	நஷ்டமில்லை.	14 விமானங்கள் மற்றும் சில சுட்டுத் தள்ளப்பட்டன.
	விமான நிலயங்கள்.—வலோனு (Valona), ஸாஸினோ (Sasseno) தீவுகள்.	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள், சைனியங்கள், பீரங்கிகள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள், ரயில் ரஸ்தா பாலங்கள்.—கெரென் (Cheren).	......	......
	ஒத்தாசை.—முன்னேறும் பிரிடிஷ் துருப்புகள்.	......	......
14—3—41. (வெள்ளிக்கிழமை).			
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலை.—கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen).	......	தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
14—3—41.	(வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
	தொழிற் சாலைகளிருக்குமிடம்.—டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).	......	......
	ஆலைகள், போக்குவரத்து சாதனங்கள், மற்றும் இதர இடங்கள்.— ரூர் (Ruhr).	......	தகர்க்கப்பட்டன.
	ராட்டர்டாம் (Rotterdam).	......	......
	விரோதி கப்பல்கள், விமான நிலயங்கள், கப்பல் துறைகள்.—நார்வே (Norway)யிலிருந்து, ப்ரெஸ்ட் (Brest) வரையில் கடற்கரையில் பல இடங்கள்.	......	......
	படையெடுப்பு.—விரோதி விமான நிலயங்கள்.	......	பலத்த சேதம்.
	அல்பேனியா (Albania)		
	விமானச் சண்டை.—க்ளிஸுரா (Klissura) பிரதேசம்.	......	8 விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. பல சேதமாயின.
15—3—41.	(சனிக்கிழமை).		
	ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்ரமித்திருக்கும் ஐரோப்பாவும்.		
	இரவில்.—தொழிற் சாலைகளிருக்கும் இடங்கள்.—டஸ்ஸல்டார்ப் (Dussel-Dorf).	......	......
	ஸப்மரைன் (Sub-marine) நிலயம்.—லோரியான் (Lorient).	......	......
	அல்பேனியா (Albania).		
	தரையிலிருக்கும் விமானங்கள், பெட்ரோல் கிட்டங்கி.— பேராட் (Berat) விமான நிலயம்.		தரையில் பல விமானங்கள் நாசமாயின
	தரையிலிருக்கும் விமானங்கள்.— வலோனு (Valona).		4 விமானங்கள் நாசம்.
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	டிரிடாவா (Diredawa), கெரென் (Cheren).	நஷ்டமில்லை.	8 விமானங்கள் நாசமாயின.

தேதி.	பிரிடிஷ், விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம்.	எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
16—3—41. (ஞாயிற்றுக்கிழமை).			
	அல்பேனியா (Albania).		
	விமான நிலயங்கள்.—டிரானு (Tirana), வலோனு (Valona).	1 விமானம்.	தரையிலிருக்கும் பல விமானங்கள் நாசம்.
	விமானச் சண்டை.—கார்ப்பூ (Corfu).		1 விமானம்.
	ஒத்தாசை.—எல்லா அணிகளிலுமிருக்கும் கிரேக்க சைனியங்கள்.	......	......
	இதாலிய ஆபிரிக்கா (Africa).		
	மோட்டார் வண்டிகள், சைனியங்கள் ரயில் பாதைகள்.—கெரெனு (Cheren)ம், அதைச்சுற்றியும்.	......	......
	வேடிமநந்துக் குவியல்கள், விமான நிலயம்—காஸ்டெல் பெனிடோ (Castel Benito).		தீப்பிடித்தன.
	தரையிலிருக்கும் விமானங்கள்.—மாகினு (Makina) விமான நிலயம்.		4 விமானங்கள், நாசமாயின.
	விமான நிலயம்.—டிரிடாவா (Diredawa).	......	......
	ஒத்தாசை.—பெர்பரா (Berbera).	......	......

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
11—3—41. (செவ்வாய்க்கிழமை).			
	பகலில்.—பிரிடனை (Britain)ச் சுற்றியுள்ள கடற்கரை பிரதேசங்கள்.	......	1 விமானம்.
	இரவில்.—மிட்லண்ட்ஸ் (Midlands), வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), வேல்ஸ் (Wales), மேற்கு இங்லாந்து (England).	8 விமானங்கள்.	சொற்பச் சேதம். சிலருக்குக்காயம்.
	ஸூயஸ் (Suez) கால்வாய்.		
	ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம்.		சேதமுமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை.

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்பால் விளைந்த சேதமும்.
11—3—41. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	மத்தியதரைக்கடல் (Mediterranean).		
	மால்டா (Malta).	......	சேதமாயிற்று,
12—3—41. (புதன்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	இரவில்.—மர்ஸிஸயிட் (Merseyside).	......	சேதம்
	ஸ்காத்லாந்தி (Scotland)ன் கிழக்குக் கடற்கரை.		சொற்பம். காயம் பட்டவர்களும்
	இன்னும் சில இதர இடங்கள்.—	9 விமானங்கள்.	சொற்பம் தான்.
13—3—41. (வியாழக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—ஒரு தென்கிழக்கு விமான நிலயம்.	2 விமானங்கள்.	......
	இரவில்.—க்ளைட்ஸயிட் (Clydeside) இங்கிலாந்தி (England)ல் மற்றும் சில இடங்கள், ஸ்காத்லாந்து (Scotland).	13 விமானங்கள்.	பலத்த சேதம் பலருக்குக் காயம்.
14—3—41. (வெள்ளிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	இரவில்.—க்ளைட்ஸயிட் (Clydeside) வட கிழக்கு இக்கிலாந்தி (England)-ல் ஒரு பட்டணம்.	......	வீடுகளுக்குச் சேதம்; சிலர் மாண்டனர்.
	தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம் இங்கிலாந்திலு (England)ம், ஸ்காத்லாந்திலு (Scotland)ம் சில இடங்கள்.	......	சொற்பச் சேதம். சிலருக்குக் காயம்.
15—3—41. (சனிக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—தெற்கு, தென்கிழக்கு இங்கிலாந்து (England), ஹோம் கவுண்டீஸ் (Home Counties), மிட்லண்ட்ஸ் (Midlands).	......	மிகச்சொற்பச் சேதம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், கிழக்கு ஆங்கிலியா (Anglia), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரத்தில் ஒரு பட்டணம்.	...... 4 விமானங்கள்.	தீப்பிடித்தது, சொற்ப்ச்சேதம்.

தேதி.	விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.	விரோதிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும்.
16—3—41. (ஞாயிற்றுக்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—மேற்கு இங்கிலாந்தி (England)ல் ஒரு பட்டணம்.	......	சேதமில்லை.
	இரவில்.—இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள்.	1 விமானம்.	சிலருக்குக் காயம்.
	கிரீஸ் (Greece).		
	லாரிஸ்ஸா (Larissa).	......	ஒருவருக்கும் காயம் இல்லை.
17—3—41. (திங்கட்கிழமை).			
	பிரிடன் (Britain).		
	பகலில்.—வடகிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), கெண்ட் (Kent) கடற்கரைகள்.	......	குண்டுகள் விழவில்லை.
	இரவில்.—கிழக்கு ஆங்கிலியக் (Anglian) கடற்கரை.	......	சேதமேயில்லை.

யுத்தக் குறிப்புகள்.

மூடி திறக்க ஆரம்பிக்கிறது.

ஐரோப்பா என்ற கோட்டையடுப்பிலிருந்து கிளம்புகிற குமுழிகளின் கனத்தைப் பற்றி நிர்ணயிப்பது சாத்தியமல்ல. சிலவற்றைப்பற்றி ஊகமாகச் சொல்லலாம். ஆனால் கேவலம் குருட்டு யோசனைபோன்ற காரியங்களில் நமக்கு பிடித்தமில்லை; ஹிட்லர் ஒரு அவிசல் பானையை கிளறிக்கொண்டிருக்கிறான்; சிலசமயம் வெகு நீளமான கரண்டியைக்கொண்டு கிளறுகிறான்; துர்நாற்றத்தைக் கிளப்பிவிட்டு மனிதர்களைத் திணர அடிக்கப்பார்க்கிறான். இச்சமயத்தில் நாம் ஆழ்ந்து யோசித்துக்கொண்டு—அவசியமானால் விஷக்காற்றடிக்காமல் முகங்களை மூடிக்கொண்டு இருப்பது நலம்.

கோளாரான சம்பிரதாயப் பேச்சுகள்

இரண்டு போர் முனைகளில் யுத்தம்செய்வதில் ஜெர்மானியருக்கு நடுக்கமென்று எண்ணி அதைப்பற்றி அழுத்தமாகப்பேசுவது வழக்கம். அது சரியல்ல. இரண்டு, மூன்று தேசங்களுடன் வெவ்வேறு திக்கில் சண்டைசெய்வது சரியல்லவென்றிருக்கலாம். போன யுத்தத்திலும் ஜெர்மனிக்கு அப்படித்தான் அனுபவம். ஜயத்தில் நம்பிக்கை உடையவர்கள் ஹிட்லர் பால்கன் நாடுகளில் மாட்டிக்கொண்டுவிட்டான். அதனால் அவன் திட்டம் செய்திருக்கும் பிரிடன்மேல் படையெடுப்பு பயன்படாது என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது பிசகு. பால்கனிலும் பிரிட்டனிலும் செய்யப்படும் படையெடுப்பு ஒரே நோக்கத்தை உடையது என்பதை மறந்துவிடுகிறார்கள். ஹிட்லரிடம் யுத்த சம்பந்தமாக ஏராளமான துருப்புகளும் யந்திரங்களும் இருக்கின்றன. குளிர்காலத்தில் அவைகளுக்குப்போக்கிடமில்லை. எதிரியை நாலா பக்கங்களிலும் தாக்கி இடைஞ்சல் செய்யவேணுமென்று நாம் எண்ணுவது போலவே ஹிட்லரும் எண்ணுவது இயல்பு.

ஒரு வியாக்கியானமும் ஒரு ஞாபக குறிப்பும்

நான் யுத்த முறையில் நிபுணனல்ல; ஆயினும், நான் ஹிட்லராகவாவது கெயிட்டலாகவாவது இருந்தால் பின்வருமாறு யோசிப்பேன். "இதாலியர் பசையற்ற பேர்வழிகள். அவர்களை நம்பி மோசம்போனேன். மத்தியதரைக் கடலும் பிரிடிஷார் வசம்தான் இருக்கிறது. பிறர்செய்த பிசகெல்லாம் நான்தான் மாற்றவேண்டியிருக்கிறது; ஆகையால் பால்கன் நாடுகளில் ஒரு கை பார்க்கிறேன். ருமேனியாவும், பல்கேரியாவும் என்வசமாகிவிட்டது. சிறிய மூர்த்தியும் பெரிய கீர்த்தியும் உள்ள கிரீஸ் இப்போது தளர்ந்துபோயிருக்குமாகையால் ஸலோனிகாவில் ஒரு கை பார்க்கிறேன். பயமுறுத்தியே இக்காரியத்தை நான் சாதிக்கக்கூடும்; முக்கியமாக இந்த ஜீவாதாரமான துறைமுகம் சம்பந்தமாக யூகோஸ்லாவியாவை நான் தாஜா செய்துவிட்டால் அப்படிச்செய்யலாம். சண்டையிடும்படி நேர்ந்தால் துருக்கிக்கு ருஷ்யாவிடம் இருக்கிற பயத்தின் பயனாக அதைத்தாண்டி நான்போக இடம்கொடுக்கும். ஸ்டாலின், பல்கேரியாவிடம் சமீபத்தில் அதிருப்தி காட்டினபோதிலும் இப்படி நடக்கும். டோடகனீஸ் தீவுகள் இருக்கின்றன. அவைகளுக்கும் ஸிஸிலுக்குமிடையே நான் பிரிடிஷாரை அமுக்கிக்கொண்டு அவர்களுக்கு அமெரிக்க சவுகரியங்கள் வராமல் தடுத்து பட்டினிபோட்டு பிரிடனையும் நெருப்புவைத்துக் கொளுத்துவேன்."

என்னுடைய சாமர்த்தியத்திற்காக எனக்கு இரும்புச்சிலுவை என்ற ஜெர்மன் பதக்கம் கொடுக்கவில்லையானால் மேலே குறிப்பிட்ட என் யோசனையில் ஏதேனும் பிழை இருக்கவேணும். ஹிட்லர் சமீபத்தில் கொஞ்சம் வாடின முகத்துடன் பேசியதிலிருந்து பின் வருமாறு நினைக்கிறான் போலும்.

(1) யூகோஸ்லாவியா பிடிவாதமாக இருக்கிறது. சந்தேகமும் குளம்பி இருக்கும் என்று தோன்றுகிறது.

(2) பல்கேரியா நடவடிக்கையைப்பற்றி ஸ்டாலின் முணுமுணுக்கிறார். அதற்கு என்ன அர்த்தமாயிருந்தாலும் முணுமுணுப்புதான்.

(3) கிரேக்கர்கள் என்னைக்கண்டு பயப்படுவதாக இல்லை; மேலும் அந்த சப்பைப் பேர்வழிகள் 'முஸ்ஸோ' அனுப்பும் துருப்புகளையெல்லாம் சிதற அடிக்கிறார்கள்.

(4) அந்த அசட்டு துருக்கியர்கள் உடன்படிக்கை யென்றால் அனுசரிக்க வேணுமென்கிறார்கள்; போதாததற்கு ஈடனுக்கும் டில்லுக்கும் பெரிய வரவேற்பு கொடுத்தார்கள்.

(5) வேவலும் அவரது வெற்றியடைந்த துருப்புகளும் என்னதான் யோசிக்கிறார்கள் என்று யாரேனும் எனக்கு சொல்லமாட்டார்களா? அவர்கள் கைதேர்ந்த பேர்வழிகள், சும்மாவிருக்கமாட்டார்கள்.

(6) போன யுத்தத்தில் கெய்ஸர் வில்லியம் வேணுமென்றே பால்கன் நாடுகளில் புரட்சி கிளப்பிவிட்டு, திண்டாடிப்போனார் என்கிற ஞாபகத்தை எனக்கு விடமுடியவில்லை.

இத்துடன் நான் ஜெர்மனை நடித்த நடிப்பை விட்டுவிடுகிறேன்.

அனாவசிய காபராக்கள்.

பொது காரியங்களில் வேலை செய்கிறவர்கள் பொது மக்களுக்கு உணர்ச்சி வலுக்கச் செய்யவேணுமென்றால், ஜப்பானைப்பற்றி பயங்கரமாகப் பேசுகிறார்கள். ஜப்பான் அச்சைச் சேர்ந்தது என்பது உண்மைதான்—ஹிட்லரின் பரிவாரம் தான்—ராணுவக்கொள்கை மிஞ்சியிருக்கிறது—ஜப்பானிய அரசியல் வாதிகளும் ஜப்பானிய கப்பற்படையைப்பற்றியும் கீழ்நாட்டில் புது முறையைப்பற்றியும் காபராப்படுத்தும் விதமாகப் பேசுகிறார்கள். ஆனால்,...............ஜப்பானியர் நம்முடன் சண்டைக்கு வரவில்லை, நமது சாம்ராஜ்ஜிய நாடுகளுடனும் சண்டையிடவில்லை, ஒருவேளை சண்டைக்கு வரவும் மாட்டார்கள், எந்நிலைமையிலும் சண்டைக்கு வரவும் லாயக்கில்லை. மேலும்...............

(*a*) இங்கிலாந்து ஜப்பானுடன் சண்டை தேடவில்லை. சண்டை வராமல் பார்க்க முயற்சி செய்துவந்திருக்கிறார்கள். அது பலிக்கவில்லையென்று சொல்ல முடியாது.

(*b*) தூரக்-கிழ் நாடுகளில் எது செய்தாலும் அமெரிக்காவுடன் நெருங்கி ஒத்துழைக்கிறார்கள்.

(*c*) ஒருவாறு ஜப்பான் சண்டைக்கு வந்தால், வலுவுடனும் நெஞ்சழுத்தத்துடனும் பிரிடன் தன் நாடுகளை காப்பாற்றிக்கொள்ளும்.

(*d*) அக்கிரமமாக சீனா தாக்கப்பட்டு வருவதில் பிரிடன் தன்னால் இயன்ற வரை சகாயம் செய்துவருகிறது.

தாய்லாண்டில் எப்படியிருந்தாலும் சரி, இதுதான் நடப்பு. இதற்குமேல் நாம் அனாவசியமாக காபரா படவேண்டாம்.

தாங்க முடியாதது.

நாம் தோல்வியடைவது சம்பாவிதமில்லை. ஆனால் அசாத்தியமில்லை. ஆனால் ஹிட்லர் ஜயமடைவதென்பது அசாத்தியம். தலை திமிர்கொண்ட எந்த நாஸிக்குங்கூட ஹிட்லர் புதுமுறை ஸ்தாபிக்க வேணுமானால் பிரிடனையும் தோற்கடிக்கவேணும். அந்த சிரமம், செலவு போதாமல் அமெரிக்காவையும் தோற்கடிக்கவேணும்.

குத்தகை-கடன் மசோதாவைப்பற்றி ஜெர்மானியர் என்ன சொல்லுகிறார்களென்றால், அமெரிக்க உதவி வெகு தாமதத்தின்பேரில் வரும் என்று நமது விமான மந்திரி, பாதுகாப்பு இலாகா மந்திரி, இதைப் பலமாய் ஆட்சேபிக்கிறார்கள். அவர்கள் ஆனந்தமடைந்திருக்கிறார்கள். 7,000 லக்ஷம் டாலர்களை முதன் முதலாக பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் எப்படி செலவிடப்போகிறானென்பதைக் கவனிப்போமானால், அவர்கள் ஆனந்தப்படுவது நியாயமென்று தெரியவருகிறது.

1. 200 ஜல சஞ்சார பீரங்கி வண்டிகள்.
2. கொசு-படகுகள் படை.
3. உணவுப்பொருள்கள்—பன்றி மாமிசம், "சீஸ்", ஒரு வேளை கோதுமை எல்லாம் ஏராளமாக.
4. நாசகாரிகளில் குறைந்தபக்ஷம் 75.
5. விமான எண்ணெய் வகைகள்.
6. யூ-படகுகளைத் தாக்க வெடிகுண்டுபோடும் விமானங்கள்.
7. யூ-படகு நிலயங்களைத் தாக்க கனமான வெடிகுண்டு விமானங்கள்.
8. விமானங்கள் நூற்றுக்கணக்காக.
9. வேகமாயும், சாதாரணமாயும் செல்லக்கூடிய குண்டுபோடும் விமானங்கள். இவையெல்லாம், "படையெடுப்பு துறைமுகங்களையும்" படகு சேமித்துவைத்திருக்கும் நிலயங்களையும் தாக்க.
10. ஜலத்தினுள் செல்லும் குண்டுபோடும் படகுகள்.
11. நூதனமான குண்டுகள்போட பார்வை சாதனங்கள், விமானங்களை எதிர்க்க தரை பீரங்கிகளில் புது யுக்திகள்.
12. பீரங்கிகள், பலவித தளவாடங்கள்.
13. யந்திர கருவிகள் ஆயிரக்கணக்காக.
14. நமது வியாபாரக் கப்பற்படைக்கு 500 கப்பல்கள்.

இன்னுமொரு குறிப்பு.—வருகிற வேனிற்கால சண்டைக்கு அமெரிக்கர் உதவி இப்போதே தேவையில்லையென்று பிரதம மந்திரியென்ன, பீவர்ப்ருக் பிரபு என்ன, ஸர் வால்டர் ஸிட்ரீன் என்ன, சாட்பீல்ட் பிரபு என்ன, எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். பிரிடன் தப்பிப்பிழைப்பதற்கு அமெரிக்கர் உதவி அவசியமில்லை. அமெரிக்க உதவியின் அளவினால், ஜெர்மனியின் தோல்வி சீக்கிரமாகும் என்பது ஒன்றுதான் விஷயம்.

தைரியஸ்தரான துருக்கியர்.

சென்ற 30 வருஷகாலமாக ஜெர்மானியர், துருக்கியரை தாஜாபண்ணிவந்ததையும், சென்ற யுத்தத்தில் துருக்கியர் ஜெர்மானியருடன் நேசமாயிருந்ததையும் கவனிக்க, ஹிட்லர் இப்போது ஏமார்ந்துபோனன் என்று சொல்லலாம்.

துருக்கியின் சிநேகத்தை எவ்வளவு முக்கியமாக ஹிட்லர் கருதுகிருன் என்பதும், வான் பேபன் வேலை மறுமுறையும் பலிக்கவில்லை என்பதும் தலைவர் இனேனுவிற்கு ஹிட்லர் பிரத்தியேகமான தூதன் அனுப்பினதிலிருந்தே தெரியவரும். (வான் பேபன் அக்டோபர் 1939-ல் ஆங்கில-பிரஞ்சு-துருக்கி உடன்படிக்கையைத் தடுக்கமுடியவில்லை; பிரான்ஸ் படுத்த சமயத்திலும், அதிலிருந்து துருக்கியை மாறச்செய்ய முடியவில்லை. சமீபத்தில் நடந்த பெரிய வியாபார உடன்படிக்கையையும் தடுக்கமுடியவில்லை).

துருக்கியின் நிலைத்ததனமே ஜெர்மனிக்கு அரசியல் தந்திரவகையில் ஒரு பெரிய தோல்வி; ஏனென்ருல், பாக்டாட் ரயில் கெய்ஸர் செய்த காலம் முதல், மத்திய கீழ்நாடுகளில் ஆதிக்கம் அடைய துருக்கி ஜெர்மனிக்கு உதவிபுரியுமென்று நம்பியிருந்திருக்கிருர்கள். நடப்பை கவனியுங்கள். கெய்ஸர் ஆர்ப்பாட்டம் நீங்கலாக, சாம்ராஜ்ஜிய நோக்கமுள்ளவர்கள் பேச்சை கேட்க இவர் அதிகாரத்திற்கு வரும் சமயந்தான் முடிந்தது. 'மைன்காம்பி'ல், ஜெர்மானிய ஆக்கிரமணம் தென்கிழக்கு திசையில் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "சமீபக் கீழ்நாடுகளிலும் தூரக்-கீழ்நாடுகளிலும், பாக்டாட் ரயில்வே காலம்முதல் நாம் குறி வைத்திருந்த பிரதேசங்களைக் கைப்பற்ற ஸெக்கோஸ்லாவாக்கியாவை அழித்தது முதல்படியென்று நாஸிகள் எண்ணம். டான்யூப் நதியிலிருந்து பாஸ்ரா விரிகுடா வரையுள்ள நாடுகளைக் கைப்பற்றினல் ஐரோப்பாவின் பந்தத்திலிருந்து நாம் விலகலாம்" என்று எண்ணினுர்கள்.

இந்த எண்ணம் பின்பற்றுவதில் பிரசாரத்திற்கு பங்கு ஜாஸ்தி. இது சம்பந்தமாக 3 ஜெர்மன் நிபுணர்கள் குறித்த குறிப்புகளிலிருந்து சில துணுக்குகள் கீழே குறிக்கிருேம். மத்திய கீழ் நாடுகளில் கலா சம்பந்தங்கள் ஏற்படுத்தினுர்களென்பதால் அவர்களுக்கு பெரும் சம்பளம் கொண்ட உத்தியோகங்கள் கிடைத்தன. இவர்கள் பிரசாரத்திற்கு "இடவசதி கொள்கையென்றும்" "கலைக் கொள்கையென்றும்" வெட்கமில்லாமல் பெயரிட்டார்கள். 'கலைவிருத்தி' யென்ற நல்ல பெயரைவைத்து அக்கிரமச் செயல்களுக்கும் ஆக்கிரமணத்திற்கும் தலைப்பட்டார்கள்.

(a) "துருக்கி—எகிப்தும் பாரஸீகமும் நமக்கு முக்கியமானவை........ பால்கன் நாடுகளும், இராக்கும் தென் அரேபியாவும் கீழ் ஐரோப்பிய தேசங்களும் நமக்கு முக்கியம் என்பதில் சந்தேகமில்லை."

(b) "பால்கன் நாடுகள் ஜெர்மனியுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன; அவை ஆசியாமைனருக்கு வாசற்படி போன்றது; ஆசியாமைனரும் எகிப்துக்கும் சமீப கீழ்நாடுகளுக்கும் வாசற்படி."

(c) "நாம் துருக்கியிலிருந்துதான் மேற்படி நாடுகளுக்குப் போக துவக்க வேணும்........துருக்கியும் நமக்கு துணையாயிருக்கவேண்டியது அவசியம்."

(d) "ஜெர்மனியின் ஸ்தல ஸந்நிவேசமும், பொருளாதார நிலையும், கலை நிலையும் இவ்வித அந்நியோந்ய ஒத்துழைப்பிற்கு அனுகூலமாக இருக்கிறது என்பதைவைத்து துருக்கியுடன் ஸ்நேகமாகவும் சமாதானமாகவும் ஒத்துழைக்க ஜெர்மனி ஆவலுள்ளதாக இருக்கிறதென்பதை நாம் அழுத்தமாகச் செய்யவேணும்."

(e) "ஜெர்மனிக்கு ஜீவாதாரமான நாடுகளிலுள்ள சிறுவர்களுக்கு ஜெர்மன் கலையை புகட்டிவிட்டோமானால், எதிர்காலத்தில் அழிக்க முடியாத ஒரு பெரிய காரியத்தை செய்தவர்களாவோம்."

(f) "நமது களங்கமற்ற யோக்கிய பொருப்பில் கீழ்நாட்டாருக்கு நம்பிக்கையுண்டு."

இம்மாதிரி 1934-ல் நம்பிக்கைகொண்டிருந்த ஜெர்மானியருக்கு 1941-ல் துருக்கியின் மனோபாவம் ஸங்கடத்தை உண்டுபண்ணும்.

படங்கள்.

புதுக்கோட்டை கிராமங்களில் சண்டை சம்பந்தமான விஷயங்களைப்பற்றி இலவசமாக சினிமா படங்கள் காட்ட ஏற்பாடு செய்திருக்கிறோமென்று 2 வாரங்களுககுமுன் பத்திரிகையில் பிரசுரித்தோம். நமது வார்த்தையை காப்பாற்றி விட்டோம். இந்த வாரம் 4, 5 கிராமங்களுக்கு அதிர்ஷ்டம் அடித்தது; அவைகளில் எங்கள் முதல் படங்களைக் காண்பித்தோம்; பிரசங்கங்களுக்கு இப்பால் கூட்டம் அதிகரித்திருப்பதே இந்தப் படங்களை பார்ப்பதில் ஜனங்களுக்கு ஆசை என்பதற்கு அத்தாக்ஷி. மாதம் சுமார் 60 கிராமங்களில் படங்கள் காட்ட வேண்டுமென்பதும் ஒவ்வொரு மாதமும் புதுப்புதுப்படங்கள் காட்டவேண்டுமென்பதும் எங்கள் நோக்கம். ஆகையால் நமது ஜனங்களின் க்ஷேமத்தை உத்தேசித்து பிரிடன் புரிந்துவரும் பெரிய போர் சம்பந்தமாக விஷயங்களைப் படங்கள் மூலமாக நகரவாசிகள் போலவே கிராமவாசிகளும் பார்ப்பார்கள் என்பதில் இனி எவ்வித சந்தேகமுமில்லை.

ஜாதி மேன்மைக்கு நாஸிகள் கொண்டாடும் பாத்தியம்.

ஹிட்லரும் டாரேயும் எழுதியது.

ஜெர்மானியர்கள் யூதர்களை ஏன் வெறுக்கவேண்டும்.

கிழக்கத்திய ஜனங்களின் ஸ்தானம்.

V. B. ஸ்டெய்ண்டன் ஐ. ஸி. எஸ். சமீபத்தில் லாகூரில் ஒலிபரப்பிய "சர்வாதிகாரி நாடுகள் சம்பந்தமான உண்மைகளும் கதைகளும்" என்னும் விஷயமாய் பேசிய விஷயங்களில் சேர்ந்தது.

தன்னைச்சுற்றிலுமுள்ள இதர ஜனங்களிடத்தில் காணமுடியாத அபூர்வமான குணங்கள் தன்னிடத்தில் இருப்பதாய் சொல்லிக்கொள்ளாத மனிதன் இவ்வுலகில் அபூர்வம். அவ்வித மதாச்சாரியன், தன் ஊரில் மதிக்கப்படுவது சகஜமானாலும் அவன் சாஸ்த்ரீயமான ஆராய்ச்சிக்கு லக்ஷயமாகவும் பரிகாசத்துக்கு பாத்திரமாகவும் இருப்பானாகையால் அவன் உபதேசங்கள் மற்ற நாடுகளின் கோபத்தை மூட்டும்; நோயல் கவார்டு சொல்லிப்படி வீண் புரளியாக முடியும். இதைக் காட்டிலும் வேறு அபாயமான பலனை அவைகள் அளிக்க முடியாது.

ஆனால், இப்பொழுது ஜெர்மனியில் நடப்பதுபோல் ஒரு நாட்டை ஆள்பவன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஜாதி மேன்மையையே முக்கியமான கொள்கையாய் கைக்கொண்டு சொன்னதை எல்லாம் நம்பும் தன் சாது ஜனங்களின் மனதில் முறையற்ற தீவிர பிரசாரவாயிலாக அக்கொள்கையை பதியும்படி செய்வானேயானால் உலகத்துக்கே ஒரு அதிபயங்கரமான புதிய ஆபத்து உண்டாயிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

நாஸிகளின் வேதம் கூறுவதென்ன?

ஜாதி, ரத்தம், தேசம் இவைகள் சம்பந்தமாய் நாஸிகளின் கொள்கைகளை ஆராய்ந்து விவரமாய் அறியவேண்டுமானால் ஆல்ப்ரெட் ரோஸன்பர்க், வால்டர் டாரே இவர்களின் க்ரந்தங்களையும் சொற்பொழிவுகளையும் பார்க்க வேண்டும். ஆனால் அவர்கள் எழுதியதும், பேசியதும், படித்தவர்களுக்காகத் தான்; அதைவிட சுலபமான வழி ஹிட்லர்தானே எழுதிய "மெயின் காம்ப்" என்னும் புஸ்தகமே.

அந்த நாஸி வேதத்தில் அடங்கிய விஷயங்கள் ரொம்ப சுலபமானவை.

அது சொல்வதாவது:—மனித வர்க்கம் அநேக ஜாதிகளடங்கியது. மற்ற ஜாதியோடு கலந்ததால் ஒவ்வொரு ஜாதியின் குணமும் எவ்வளவு மழுங்கினாலும் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்த குணங்கள் உண்டு. ஜாதிகள் உயர்ந்ததென்றும் தாழ்ந்ததென்றும் இருவகைப்படும். எல்லா விவகாரங்களிலும் ஆர்யன், நார்டிக், ஜெர்மன் ஜாதிகள்தான் மேலான ஜாதிகள். இந்த ஆர்யன், நார்டிக், ஜெர்மன் என்ற விசேஷண பதங்களுக்கு ஒரு இடத்

திலும் லக்ஷணமும் கூறப்படவில்லை ; வித்தியாசங்களும் கூறப்படவில்லை ; அவைகள் ஒன்றுக்கொன்று பரியாய பதங்கள் என்று சொல்வதில் ஒன்றும் பிசகில்லை.

மேல் ஜாதிகள்தான் கல்வியையும் அபிவிருத்தியையும் பரவச்செய்கின்றன. பலாத்காரத்தாலோ ரத்தக் கலப்பாலோ அந்த மேல் ஜாதிகள் அமுக்கப்பட்டால் நாகரீகமே மடிந்து விடும். நாகரீகம் அழியாமல் இருக்க வேண்டுமானால் மேல் ஜாதியார்—அதாவது, உண்மையில், ஜெர்மானியர்கள்—எஜமான்களாக உலகை ஆள வேண்டும். கீழ் ஜாதியாரோ அவர்களுக்கு அடிமைகளாய் ஊழியம் செய்யவேண்டும் ; அவர்களுடைய தேவைக்குத் தக்கபடி அவசியமான சாமான்களையும் உற்பத்தி செய்து கொடுக்கவேண்டும்.

டாரே கூறிய லக்ஷணம்.

“மெயின் காம்பு” எழுதப்பட்ட போது கீழ் ஜாதியாரின் காரியங்கள் தெளிவாகவே சூசிக்கப்பட்டன. ஆனால் சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் நாஸிகளின் விவசாய மந்திரியான டாரே அதைக்காட்டிலும் வியக்தமாய் எடுத்துச்சொல்லியிருக்கிறார். அவர் கூறிய லக்ஷணமும் எல்லோரும் அறியத் தக்கது.

ஜெர்மானியர்களின் ஜயத்துக்குப் பிறகு யுத்தத்திற்கு பிற்காலத்திய உலகைப்பற்றி சொல்லும்பொழுது, மற்ற ஐரோப்பிய ஜனங்களின் சொத்துக்களைப்பிடுங்கி ஜெர்மானிய நாஸிகளுக்கும் போர் வீரர்களுக்கும் பிரித்துக் கொடுப்பதன் மூலம் புதிய ஜெர்மானிய பிரபுவர்க்கம் ஏற்படுத்தப்படும் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது :—“இந்த பிரபுக்கள் சமூகத்துக்கு அடிமைகள் அளிக்கப்படுவார்கள். இவ்வடிமைகள் அவர்களின் சொத்து, நிலங்களை இழந்த ஜெர்மானியரல்லாதார் தான் இந்த அடிமைகள். அடிமைகள் என்ற வார்த்தையை வெறும் கதையென்றாவது வீண் வார்த்தை என்றாவது நினைக்காதீர்கள். முந்தின நாளைய அடிமை இயக்கத்தை நவீன முறையில் அமைக்க நினைக்கிறோம். நம்முடைய மகத்தான வேலைகளை முடிப்பதற்காக நாம் அப்பேர்ப்பட்ட இயக்கத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரத்தான் வேண்டும் ; அதுவும் நமக்கு அவசரத்தேவை. எழுதப்படிக்கத் தெரியாமலிருப்பதால் ஏற்படும் நன்மைகள் இவர்களுக்கு இல்லாமல் போய்விடாது. மேல் படிப்பு என்பது இனிமேல் ஐரோப்பாவிலுள்ள ஜெர்மானிய ஜனத்தொகுதிக்கு மட்டில் தான்.” “மகத்தானவேலைகள்” என்றது பலாத்காரத்தாலோ பொருளாதார வழிகளாலோ உலகத்தின் மற்ற பாகங்களை ஜயிப்பதுதான்.

லக்ஷண ஸமன்வயம்.

நாஸிஅமுலுக்குள்பட்ட மந்தபாகிகள்—முக்கியமாய் வெகு வருஷங்களாக ஹீனஜாதியார் என்று இளப்பப்படுத்தப்பட்டுவந்த போலிஷ் ஜனங்களும் ஸெகோஸ்லோவாகியர்களும்--நடத்தப்படும் மாதிரி மேலே சொல்லப்பட்ட எச்சரிக்கையை பலப்படுத்துகிறது. ஆனால் இந்த நாஸிக் கொள்கைகளின் சரியான அனுஷ்டானத்தைத்தெரிந்து

கொள்ள ஜெர்மனியில் யூதர்கள் நடத்தப்பட்ட விதத்தைத்தான் நாம் கவனிக்கவேண்டும்.

அதற்குமுன், ஹீன ஜாதியாராக கருதப்பட்ட இதர ஜனங்களைப்பற்றி ஹிட்லர் என்ன சொல்கிறான் என்று பார்ப்போம். "மெயின் காம்பு" எழுதப்பட்ட காலத்திலெல்லாம் ஜெர்மனிக்கு பிரிடிஷாரின் ஒத்துழைப்பு கிடைக்குமென்று எண்ணப்பட்டு வந்தது. அதனால் பிரிடிஷாருக்கு ஜாதிகளில் உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்பட்டது. இப்பொழுது டாரேமின் பிரசங்கத்தை கவனித்தால் நாஸிகளின் அடிமை ஸமஸ்தானத்தில் பிரிடிஷாருக்கு எவ்வித கதி ஏற்படுமென்பதைப் பற்றி எள்ளளவும் சந்தேகத்துக்கிடமில்லை.

கிழக்கித்தியரின் ஸ்தானம்.

ஜப்பானியர்களின் ஸ்தானத்தைப் பற்றி நிச்சயமாய் சொல்வதிற்கில்லை. அவர்களை "உயர்ந்த வித்தையின் இருப்பிடம்" என்று சொல்லக்கூடுமானாலும், அவ்வித வித்தையின் உத்பாதகர்கள் என்று அவர்களை சொல்ல இயலாது. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள மற்ற ஜாதியாரிடம் ஹிட்லருக்கு அருவெருப்புத்தான்.

ஹிட்லர், சென்ற யுத்தத்தில் ஜெர்மனிக்கு உதவிய சில இந்தியர்களைப் பற்றி, "இந்தியாவின் சுயேச்சைக்காக பாடுபடுவதாய் சொல்லிக்கொண்டு முன்னுக்குவரும் சில ஆசியக்கொள்ளைக்காரர்கள்" என்கிறார். அவர்களைப் பற்றியும், இன்னும் இதர தேசியவாதிகளைக்குறித்தும் அவர் சொல்வதாவது :—"ஒரு தேசியவாதி என்ற முறையில் மனித வர்க்கத்தில் ஜாதிக்கொள்கைதான் அடிப்படையானது என்ற வாதத்தின் மதிப்பை நான் அறிகிறேன். "தாழ்த்தப்பட்ட தேசத்தார்" (oppressed nations) என்று சொல்லிக்கொள்வது. அந்த தேசத்தாரின் ஜாதித் தாழ்மைதான் என்று நான் உணருகிறேன். என்னுடைய ஜனங்களின் பாக்கியங்களை இந்த கீழ் ஜாதியாரின் பாக்கியங்களுடன் கலப்பதிலிருந்து என்னைத் தடுப்பதற்கு இதுவே போதும்.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இப்பொழுதும் ஹிட்லரை ஆதரிக்கும் ஏமாத்தக்காரர்கள் சிலரேனும் இதைப் படித்திருப்பார்களா?

நியாய விரோதமான குற்றங்கள்.

எல்லோருக்கும் நன்றாய் தெரிந்திருந்தாலும், அவசியம் சொல்லவேண்டியதால் இன்னுமோர் வாக்கியம் உண்டு. அதாவது :—"உலகத்தின் ஏதாவது ஒரு பாகத்தில், அந்த தேசத்தில் முதல் முதலாக, ஒரு நீக்ரோவன் சட்ட நிபுணனாகவோ, உபாத்தியாயராகவோ மதகுருவாகவோ, ஒரு பெரிய ஆபெராகாரனாகவோ, வேறுவிதமாகவோ, ஆகிவிட்டான் என்ற சமாசாரங்கள் அடிக்கடி நமது சித்திரப் பத்திரிகைகளில் வெளியாகின்றன. அப்படி பிரசுரம் செய்யப்பட்ட விஷயம் நியாயத்துக்கு ஒவ்வாத ஒரு மகத்தான லாபம் என்றும் ஒரு பிறவி மிருகத்தை ஒரு நியாயவாதி என்று சொல்லிக்கொள்ளக்கூடிய நிலைமையில் பழகி வைப்பது ஒரு பயித்தியக்காரச் செயல் என்பதும், இந்த பாமர மக்களின் இருளடைந்த மனதில் படுகிறதில்லை."

மற்ற கீழ்ஜாதியார்களைப் பற்றிய வரையில் இவ்வளவே போதும்; இனி யூதர்கள் ஸ்திதியை கவனிப்போம்.

யூதர்களிடம் ஹிட்லர் கொண்டுள்ள பகை.

ஹிட்லருக்கு யூதர்களிடம் த்வேஷம் ஏற்பட்டதற்குமுன் அவருக்கு வியன்னாவில் ஏற்பட்ட அனுபவங்கள் தான் காரணம். அவருடைய ஜாதிக்கொள்கைகளில் யூதர்களுக்கு ஒரு தனித்த ஸ்தானம் கொடுக்கும்படி செய்தது இந்த த்வேஷம் தான்.

சென்ற யுத்தத்தின் தோல்விக்குக் காரணம் யார் என்று சொல்லலாமென்றுதேடி, இந்த யூதர்களே அவர்களுடைய ஸமூகக்கொள்கைகள், ஜனநாயகக் கொள்கைகள், சமாதானக் கொள்கைகள், சர்வ தேச ஸமரஸக் கொள்கைகள் இவைகளால் சாதாரண ஜனசமூகத்தை கெடுத்து விட்டார்களென்றும் இன்னும் கேவலம் என்னவென்றால், கல்யாணத்தால் இன்னும் சில கேவலமான உபாயங்களாலும், யூதரத்தை நார்டிய ஜெர்மன் ரத்தத்துடன் கலந்ததாலும், கெடுத்து விட்டார்கள் என்றும், ஹிட்லர் ஒரு அநியாயமான குற்றச்சாட்டுதலை சிருஷ்டித்தான்.

"தோல்வியுறாத ஒரு சைனியத்தை பின்பக்கத்திலிருந்து குத்தினார்கள்" என்ற ஒரு கட்டுக்கதை இதனால் கிளம்பிற்று. ஜூலியஸ் ஸ்ட்ரீஷர் என்பவருடைய அருவருக்கத்தக்க தூஷணைங்களுக்கு முன்னறிவிப்புகள்போல் ஹிட்லர் தன் புத்தகத்தில் பலபாகங்களில் யூதர்களிடம் தனக்குள்ள அத்தியந்தப் பகையை வெளியிட்டிருக்கின்றான்.

ஜெர்மனியின் மானபங்கத்திற்கு யூதர்கள் தான் பொறுப்பாளர்கள் என்று திருப்தியடைந்த மேல், யூத சாஸ்திரிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் ஜெர்மானியப்பண்புக்குச் செய்திருக்கும் விலையற்ற தொண்டுகளை மறுத்தும் மறந்தும், இந்த யூதர்களை ஜெர்மனியிலிருந்து வேர்அறக்களைய வேண்டுமென்று நிச்சயம் செய்து கொண்டான். அதனால், யூதர்களை துன்புறுத்தும் சென்ற பத்து வருஷங்கள் கடந்தன. 1935-ம் வருஷம் ந்யூரன்பர்க் சட்டங்கள் என்ற அநியாயமான, ஓர் வஞ்சனை சட்டங்களில் அத் துன்புறுத்தல் உச்சத்தை யடைந்தது.

ஜெர்மானியர் ஏன் சம்மதித்தார்கள்.

யூதர்களில் வெகு சிறுபாலார் ஜெர்மானியரின் வாழ்க்கையிலும் பண்பிலும் கொண்ட பெருத்த செல்வாக்கும் ஜெர்மானியர் கொண்ட பொருளாதார நோக்கங்களுமே ஜெர்மன் பொது ஜனமும் இந்த கோரமான துன்புறுத்துதலை அங்கீகரிக்க காரணமாயிருந்தன வென்பதுதான் வெகு பரிதாபகரமான நிலை.

முதன் முதலே யூதர்களைக் கண்டால் அருவருப்பும் பொறாமையும் உண்டு. ஆகையால் பொது வாழ்க்கையிலிருந்தும் தொழில்களிலிருந்தும் யூதர்களை ஒழிக்க ஜெர்மானிய மனச்சாக்ஷி சகஜமாக இடங்கொடுத்தது. அதனால் காலியான உத்தியோகங்களை தங்களுடைய கக்ஷியார்களுக்கு கொடுப்பதற்கும் பிறர்களை இழுப்பதற்கும் காரணமாகயிருந்தது.

ஜாதிப்பெருமையை பிரவசனம் செய்த முன்னோர்.

இதுமட்டுமல்ல, யூதர்களை நாசம் செய்வதை பேசாமல் பார்த்துக் கொண்டோ, அல்லது அங்கீகரித்துக் கொண்டோ இருப்பதற்கு பிரசிஸைம் பிதாயமும் அப்படியே என்று காட்டினுலொழிய யூதர்களை நாசம் செய்வதில் பொது ஜனத்துக்கு பூர்ண திருப்தியாவது, அவர்களுடைய ஆதரவாவது கிடைக்காது.

ஜாதி மஹாத்மியம் ஜெர்மனியில் ஒரு புதிய கொள்கையல்ல. வல்லரசுகளில் ஒன்று, அதன் அரசியல் கொள்கையின் அம்சமாக அதை எடுத்துக் கொண்டது நாஸி தத்துவத்தின் நவீனம். லத்தின் ஆசிரியரான டாஸிடஸ் என்ற பண்டைகாலத்தவரே "மூர்க்கமான நிலைகண்களும், செம்பட்டை மயிரும் நெட்டையான சரீரமும் கொண்ட ஜெர்மானியர் அந்நியருடன் குடியேறியோ தற்செயலாகவோ கலப்பு கொள்ளாத சுத்த ஜாதியார்" என்றுர்.

அவ்வளவு பண்டை காலத்துக்குப் போகவேண்டியதில்லை. சென்ற நூற்றுண்டின் மத்தியிலிருந்து பல ஐரோப்பியர்—யாவரும் ஜெர்மன் அல்ல—ஆர்யர்களையும், நார்டியர்களையும் (வடக்கித்தியார்களையும்), ஜெர்மானியரையும் அவர்களுடைய உயரிய நற்குணங்களையும் பெருமைப்படுத்திப் பேசி, அதன் பிற்கால முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாகவும், அது தாழ்வடைவதை கண்டிப்பதாகவும் சொல்லியிருக்கிறுர்கள். அவர்களில் பிரெஞ்சுக்காரர்கள் கோபிநோ, தேலாபௌஷ் என்பவர்களும் ஆங்கிலரில் ஹௌஸ்டன் ஸ்டேவார்ட் சேம்பர்லேன் என்பவரும். இந்த ஆங்கிலர் மற்றொரு நார்டியப் பெருமைகொண்ட ரிச்சார்டு வாக்னர் என்ற ஜெர்மானியரின் மருமகன்.

மனிதனுக்குக் கீழ்பட்ட ரகம்.

டாக்டர் கௌஷ் என்ற ஒரு பிரசித்தி பெற்ற பிரசுரகர் சொல்லியிருப்பதை யெடுத்துரைக்கத்தான் இப்பொழுது அவகாசமிருக்கிறது. "நார்டியரல்லாதவன் நார்டியனுக்கும் மிருகத்துக்கும் மத்தியில் இருக்கிறுன். மனிதக் குரங்குக்கு அடுத்த மேல்படியிலிருக்கிறுன். அவன் ஸம்பூர்ணமான மனிதன் அல்ல. மிருகத்தினிடமிருந்து பிரிக்கப்பட்ட மனிதவர்க்கத்தில் உண்மையில் அவனை சேர்க்கக்கூடாது. அவனொரு மாறுதல் நிலை, ஒரு மத்திய நிலை. ஆகையால் அவனை மனிதனுக்குக் கீழ்ப்பட்டவன் என்று சொல்வது தகுதியே. நார்டியரல்லாதார், குரங்குகளை ஒட்டியவர்களாக இருக்கையில் குரங்குகளுடன் புணராமல் நார்ட்டியருடன் புணருவது எப்படி முடியும்? இதற்கு விடை என்ன வென்றுல் நார்டியரல்லதார் குரங்குகளுடன் புணர முடியாது என்று ருஜூ செய்ய முடியாது என்பதுதான்."

ஆரியர்கள் யார்?

மேற்கண்ட கொள்கைகள் சாஸ்திரப்படி ஒப்புக்கொள்ளக்கூடியவையா யென்பதைப்பற்றி இதுவரை நான் சொல்லவில்லை. காரணம் என்ன வென்றுல் சாஸ்திரோக்த காரணங்கள் இல்லை யென்பதே. அக்கொள்கைள் சாஸ்திரப்படி உபயோகமற்றவை.

மானிட ஜீவசாஸ்திரம், ஜீவதத்துவ சாஸ்திரம் இவைகளில் நிபுணர்களான ஜூலியுன் ஹக்ஸ்லி, ஹாடன், மாகனஸ் ஹெர்ஷ்பில்டு முதலியோர் "ஜாதி" என்ற பதத்திற்கே சாஸ்திரீயமான பொருள் கிடையாது என்று நிரூபித்திருக்கிறார்கள். ஆர்ய ஜாதி யென்பதே கிடையாது. சில பாஷைகளின் கூட்டத்துக்கு அப்பெயர் உண்டு. அப்பாஷைகள் பேசும் மனிதர்கள் மனித நாகரீகத்தை ஸ்தாபித்தார்கள், அல்ல மற்றவரைக் காட்டிலும் அவர்கள் மனித முன்னேற்றத்துக்குப் பாடுபட்டார்கள் என்ற கொள்கைக்கு ஆதாரமே கிடையாது.

ரத்தத்தில் சம்பந்தமோ, தாய்க்கும், மகனுக்குமுள்ள பாந்தவியமோ ஒரு பிசகல்ல. நாஸிகள் சொல்லுகிறபடி கலப்பில்லாத சுத்தமான ஜாதியென்பது மித்தியை. ஒன்றின்பின் ஒன்ருக ஏற்பட்ட குடியேற்றங்களும், ஜாதிக் கலப்புகளும், சீதோஷ்ண மாறுதல்களும், ஸ்வீகாரம் செய்யும் வழக்கமும், இன்னும் சில விஷயங்களும், இக்கலப்பில்லாத ஜாதியிருக்க முடியாது என்று காட்டுகிறது.

யூத கலப்பில்லாத வம்சாவளி ஏற்படுத்துவது அஸாத்தியம் என்று நாஸிகளே தெரிந்துகொண்டார்கள். அதற்காக பல சட்ட மித்தியைகளைக் கைக்கொண்டு, ஜாதிச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள்.

ஜாதிச் சின்னங்கள்.

சில சில ஜாதிகளுக்கு சிற்சில பிரத்தியேகமான குணங்கள் நீதியிலோ, பழக்கவழக்கங்களிலோ உண்டென்பது பொய். தாங்கள் உயரமுள்ளவர்கள், பும்ஸத்துவமுள்ளவர்கள், நீண்ட தலையுள்ளவர்கள், அழகானவர்கள், டியூடானிக் லக்ஷணத்தைக்கொண்டவர்கள் என்று நம் ஜெர்மன் சகோதரர் சொல்லிக்கொள்ளுகிருர்கள். இந்தக் கொள்கைகொண்ட பலர் சொல்லும் லக்ஷணங்களைக்கொண்டு ஒரு சித்திரம் வரைவோம். ஹிட்லரைப்போல் கருஞ் செம்பட்டை மயிருள்ளவனுக இருக்கலாம். ராஸன்பர்க்கைப்போல் நீண்ட தலையுள்ளவனுகயிருக்கலாம். கோயபல்ஸைப்போல் உயரமாகயிருக்கலாம். கோயரிங்கைப்போல் மெல்லியவனுகயிருக்கலாம். ஸ்ட்ரீஷரைப்போல் வீரியமுள்ளவனுகயிருக்கலாம். அவன் ஜெர்மானிய கொள்கைப்படி எவ்வாறு ஜெர்மனுவான்?" என்று ஹக்ஸ்லி என்பவர் சொன்னுர்,

நாஸி கொள்கைகளின் சாஸ்திர ஆதாரத்தைக் காண்பிக்க மேற்கண்ட விஷயமே போதுமானது. யாவரும் முஸோலினியும்கூட "ஜாதியென்பது ஒரு தத்துவமல்ல. அது ஒரு உணர்ச்சி", என்று சொல்லியிருக்கிருர்கள். இக் கல்லறைக் கல்வெட்டுடன் இந்த ஜெர்மன் ஜாதிக் கொள்கையைப் புதைப்போம்.

இவர்களுடைய கொள்கைகள் ஜெர்மனியில் சற்று அங்கீகாரம் செய்யப்பட்டதால் பிற்பட்டு வந்த அதிவிசித்திரமான நாஸி கொள்கைகளை எதிர்ப்பு இல்லாமல் பரப்புவதற்குக் காரணமாகயிருந்தது. "அதிவிசித்திரம்" என் சொல்லுகிறேன் என்ருல், ஹிட்லர், டாரே, முதலியோருடைய பரிவாரங்களுடைய வியாக்கியானங்களுடன் ஒத்துப்பார்க்குமளவில் மேற்கண்ட தலைவரின் ஸூத்திரங்கள் வெகு சித்தஸ்வாதீனத்துடன் எழுதப்பட்டனவென்று தோன்றும்.

பிப்ரவரி 14-முதல் 20-க்குள் நடந்த யுத்தப்போக்கைப்பற்றி அமெரிக்காவிலுள்ள பத்திரிகைகளின் வியாக்யானம்.

பிப்ரவரி 12-ம் தேதியில் வெளியான க்ளீவ்லாந்து ப்ளேயின்டீலர் என்னும் பத்திரிகை பின்வருமாறு அறிவிக்கிறது :—

ஒரு தேசம் பாதி அடிமைகளாகவும் பாதி சுதந்திரமுள்ளதாகவும் இருக்க முடியாது என்று லிங்கன் சொன்னது வாஸ்தவமான பழமொழிதான். அதே மாதிரி பாதி அடிமைத்தனத்தையும் அழிந்துகொண்டு வரும் சுயேச்சையின் யதாம்சத்தை அனுபவித்துக்கொண்டும் ஒரு உலகமும் நிலைத்திருக்க முடியாது. இந்த அவஸ்தையை நிவர்த்திக்கத்தான் அமெரிக்காவிலுள்ளவர்கள் யுத்தம் செய்ய வேண்டும். தங்களால் இயன்ற அளவு முயற்சி செய்யவும் இந்த நவீன அடிமைத் தனத்திலிருந்து கோடிக்கணக்கான தங்கள் சகோதரர்களை விடுவிக்க அவசிய மான தியாகங்களைச் செய்யவும் அவர்கள் கங்கணம் கட்டிக்கொள்ளாத போனால், அவர்களின் சொந்த உரிமைக்கு நன்றிபாராட்டாதவர்களாவார்கள்.

அமெரிக்காவிலுள்ள மதசம்பந்தமான அபிப்பிராயங்களைப் பரிசீலனை செய்யும் காலத்தில் பிப்ரவரி 13-ம் தேதியன்று வாண்டரர் என்னும் பத்திரிகை எழுதுகிறது.

யுத்த முறைப்படியானாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாம் ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டோம் என்று எல்லோருக்கும் ஸ்பஷ்டமாய்த் தெரியவரும். பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் அநேகவிதமாகப் பேசியது மட்டுமல்ல, நாம் கப்பல்கள், விமானங்கள், வெடிமருந்துகள் இவைகளை பிரிடனுக்கு அனுப்பித்து ஜெர்மனிக்கு அனுப்ப மறுத்தது மட்டுமல்ல. அமெரிக்கா தேசம் பூராவும் நாஸிகளின் கொள்கைகளையும், முறைகளையும் இகழ்ச்சி செய்கிறது. அருவருப்புடனும் மதிக்கிறது, மேலும் உலகமானது, சாஸ்திரத்தின் அதிசயத்தினாலும் புதிதாக உற்பத்திசெய்கிற ஏற்பாடுகளாலும் சிறிதாகவும், அடக்கமாகவும் மாறி வருகிறது என்றும் வெகுகாலம் இம்மாதிரியாக பாதி அடிமைகளாகவும், பாதி சுதந்திரமுள்ளவர்களாகவும் இருக்கமுடியாதென்றும் நாம் நினைக்கிறோம். சமீப காலத்தில் இவ்விரண்டு முறைகளும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு, ஏதாவது ஒன்று மற்றொன்றுக்குப் படியவேண்டும். அல்லது அழிபட்டுவிட நேரிடும்.

யுத்த தந்திரத்தினுல் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களை ஜப்பான் எதிர்பார்க்க வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் கடற்படையின் சங்கியை ஜப்பானுடையதைவிட அதிகரித்துவிட்டது.

டச்சுக்காரர்களுக்கும் ஸயாமிஸுகளுக்கும் ஆங்கில அமெரிக்காவின் நம்பிக்கை உறுதி தேவை.

[தெற்குக்கடலிலிருக்கும் ஸ்திதியைப்பற்றி ஒரு வியாசத்தில் ராஜ்ஜிய தந்திரி ஒருவர் எழுதுகிருர்.]

சைனுவில் நடக்கும் யுத்தம் இருதரப்பாராலும் முடிவு செய்யக்கூடாத வண்ணம் நடந்து கொண்டேயிருக்கிறது. யுத்தத்தின் மூன்ருவது வருஷத்திலும் ஜப்பானிய திரவிய சாதனங்களும் மனித பலமும் ஏராளமாகச் செலவழிக்கப் பட்ட போதிலும் ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. இப்பொழுது பின்னும் ஆறுமாதங்கள் கழிந்து விட்டன. கோனுயி இளவரசன், யுத்தம் சீக்கிரத்தில் முடிவடைந்துவிட சின்னங்கள் இருக்கின்றனவென்று ஒப்புக்கொள்ளக்கூட வில்லை.

அதிர்ஷ்டவசமாக, சென்ற வேனிர் காலத்தில் ஐரோப்பாவில் உண்டான சில சம்பவங்களினுல் ஜப்பானியர்களுக்கு சேனைகளை உபயோகப்படுத்தக்கூடிய ஒரு புதிய யுத்தரங்கம் உண்டாகியிருக்கிறது. ஹாலந்து முறியடிக்கப்பட்டது. பிரான்ஸ் விழுந்து விட்டது. பிரெஞ்சுக் கடற்படை நிலைகுலைந்து விட்டதனுல் கடற்படை பலத்தின் சரி இடைமானம் மாற ஆரம்பித்து விட்டது. தூரக்-கிழக்கு நாடுகளில் ஜனநாயக நாடுகள், பயப்பட்டுக்கொண்டுதான் கடற்படை அமுலைச் செய்ய வேண்டுமென்று ஜப்பான் நினைக்கக்கூடும். ஜப்பானுடைய ஸ்திதி என்னவென்ருல் பணக்காரர்களான அநேக அத்தைகள் சொத்துக்களின் விநியோகத்தைப் பற்றி ஏற்பாடு செய்யாமலிறந்து விட்டார்களென்று கண்டு கொண்ட ஒரு மனிதன் தான் இறந்தவர்களுக்குக்கிட்டின பந்து என்று ஸ்தாபித்துக்கொள்ள ஒரு அழகிய தருணம் வாய்த்ததென்று எண்ணுகிறவன் போல. பிரான்ஸில் பீரங்கிகளின் சத்தம் ஓய்ந்த உடன்காலத்திலேயே இந்தப் பிரயத்தனம் ஆரம்பமாயிற்று. பொருளாதாரம் சம்பந்தப்பட்ட மட்டில் டச்சுக் கிழக்குத் தீவுகளில் பலவந்தம் செய்வதன்மூலம் ஆரம்பமாயிற்று மிஸ்டர் கோபயாஷி என்பவர் ஒரு பிரபல வர்த்தக தூதுகோஷ்டியுடன் சென்று அநேக வாரங்களாகப் பேச்சுகள் நடந்த பிறகு 9,00,000 டன்கள் இடையுள்ள எண்ணெய் விற்பனை செய்வது மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு ராஜ்ஜிய தந்திர ஏற்பாட்டிற்காக மிஸ்டர் யோஷிஸாவா என்பவர் அனுப்பப்பட்டார். இவர் ஜப்பானை விட்டுப் புறப்படுமுன், ஜப்பானில் சாமான்கள் "இல்லாத" நிலைமையைப்பற்றியும் டச்சுக்காரர்களிடமிருந்து முக்கியமான சில சாதகங்களைப் பெறவேண்டிய அவசியத்தைப் பற்றியும் சில பிரசுரங்கள் செய்திருக்கிருர். அவர் டச்சுக்-கிழக்குத் தீவுகளுக்கு

வந்தவுடன் சர்ச்சை செய்யவேண்டிய அம்சங்களில் டச்சு-கிழக்கு தீவுகளுக்கு வெளியேயிருக்கும் இடங்களைப் பரிசோதனை செய்யவும், விமான மார்க்கங்களை ஏற்படுத்தவும், சுரங்கங்களை உபயோகப்படுத்தவும், மீன் பிடிக்கும் பாத்தியதையை அடையவும், விருத்தி செய்யப்படாத பிரதேசங்களை சீர்திருத்தம் செய்யவும், கடைசியாக, இண்டீஸ் தீவுகளில் ஜப்பானியக் குடிஜனங்களை, வியாபாரிகளாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் நிலைநாட்டவும் வேண்டிய அயிட்டங்கள் சேர்ந்திருந்தன.

பொருளாதார முகமூடி.

இந்த விவரங்கள் ராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொள்ள அபிப்பிராயமுள்ள திட்டத்தை மறைபொருளாகச் செய்யும் ஒரு பொருளாதார முகமூடி என்று மதித்து, டச்சுக்காரர்கள் விவாதங்களை பண்டம் மாற்றுதல் வியாபாரம் செய்வதோடு மட்டும் நிறுத்திக்கொண்டார்கள். இந்த ஸந்தேகாஸ்பதமான விஷயங்கள், ஜப்பானின் "கிழக்கு நாடுகளில் தலைமை வகிக்கும்" அபிப்பிராயத்தைப் பற்றி டியட் சபையில் ராஜாங்க வர்க்கத்தார்கள் செய்த ஆடம்பரத்திலிருந்து அதிகமாகி விட்டன. உலகத்தின் புதிய அமைப்பில் சேர்ந்துகொள்ளுவதாக எங்களுக்கு எண்ணமில்லை என்று ஜப்பான் பகிரங்கமாகச் சொல்லியது தவறாதலென்று டோகியோவுக்கு வலுவாக ஆக்ஷேபணைகள் அனுப்பப்பட்டன.

ஜப்பானியர்கள் இந்த ஆக்ஷேபனையைத் தள்ளிவிட்டார்கள். ஆனாலும் டோக்கியோவிலும், படேவியாவிலுமுள்ள ஜப்பானிய அதிகாரிகள் இந்தப் "புதிய அமைப்பு" பொருளாதார சம்பந்தமான நோக்கத்துடன்தானென்று சொல்லத் துணிந்து விட்டார்கள்.

ஆனாலும், டச்சுக்காரர்களுக்கு இவ்வார்த்தைகளில் நம்பிக்கை உண்டாகவில்லை.

இதுவரையில் நடந்த பொருளாதார ஏற்பாடுகள் பலிதமாக ஆகவில்லை. ஆனால் பிரெஞ்சுக் காரர்களுக்குச் சொந்தமான சைனாவில் ஜப்பானியர்களுக்கு ஜயமுண்டாகிற்று. இவ்விடத்தில் ராணுவ பலத்தின் உதவியைக் கொண்டு கட்டாயம் செய்ய சந்தர்ப்பம் வாய்த்தது.

ஸெப்டம்பர் மாதத்தில் கொஞ்சகாலம் ஆக்ஷேபனை செய்துவிட்டு, பிறகு பிரெஞ்சு அதிகாரிகள், ஜப்பானுக்கு, விமான நிலயங்கள், பாதுகாப்புப்படை, வியாபார வசதிகள், இம்மாதிரியான இன்னும் அநேக சாதனங்களைக்கொடுக்க, சம்மதித்து விட்டார்கள். ஜப்பானியர்களின் ஏற்பாட்டிற்கு முகவுரையாக ஜப்பானியர்கள் க்வாங்ஸி நிலபாகத்தை காலிசெய்து விட்டார்கள். பிரெஞ்சுக்காரர்கள் சரணடைந்தபொழுது, ஜப்பானியத் துருப்புகள் தெற்குப் பிரதேசத்தில் உபயோகப்படுத்த லாயக்காயிருந்தன.

பிரான்ஸைத் துரத்திவிடும்.

இப்பொழுது ஹைனன் தீவில் படைகளின் இரண்டு பகுதிகளும் பார்மோஸா தீவில் ஒரு பகுதியுமிருக்கின்றன. விஷியோடு ஏற்பட்ட ஒப்பந்தப்படி ஹைபாங்கு தீவில் ஒரு பெரிய பாதுகாப்புப்படை வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப்படை இலையுதிர்காலம் முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக வலுவடைந்திருக்கிறது. இந்தப் படையின் ஆக்கிரமிப்பினின்றும் விசேஷமான பொருளாதார லாபங்கள் கிடைக்கக்கூடும். இந்தோ-சீனதேசம் ஒன்று சேர்க்கப்பட்ட குடியேற்றநாடு. அதனுடைய வியாபாரத்தின் பெரும்பாகம் பிரெஞ்சு தேசத்துடன் தானிருக்கிறது.

ஆகையால், இப்பொழுது பிரஞ்சுதேசத்தை அங்கிருந்து விரட்டிவிட்டு, நெசவு சாமான்கள், மூஸ்தீப்புகள், சில்லரை சாமான்கள் இவைகளின் விற்பனையில் ஏக சுதந்திரபாத்தியம் ஏற்படுத்திக்கொள்ள ஜப்பானுக்கு சாதகமேற்பட்டிருக்கிறது. இதற்குப் பதிலாக, அவ்விடங்களில், நிலக்கரி, இரும்பு, டங்க்ஸ்டன் போன்ற உலோக சேமிப்புகளும், ரப்பரும்,அரிசியும் இருக்கின்றன.

ஜப்பானின் ஏற்பாடுகளெல்லாம் தந்திரத்தினாலேயே செய்யப்பட்டு வருகின்றன. இந்தோ-சீனத்துக்குப் பிறகு தாய்லாந்தை ஆக்கிரமிக்க ஏற்பாடு ஆரம்பித்துவிட்டது. இங்கேயும் சென்ற ஜுன் மாதத்தில் ஏற்பட்ட சம்பவங்களிலிருந்து 1939-ம்வருஷம் ஜுன் மாதத்தில் தாய்லாந்தின் கொள்கைகள் முற்றிலும் மாறுதல்களடைந்துவிட்டன.

தாய் நாடு.

தாய் நாடு அரசங்கத்தார், பிரான்ஸுக்கும் பிரிடனுக்கும் தாய் நாட்டிலுள்ள விமான நிலயங்களேயும், கரி, எண்ணெய் முதலியவைகளை சேமித்துக்கொள்ள போதுமான ஸ்தலங்களேயும் கொடுத்து அவைகளுக்குப் பதிலாக தன்னுடைய சுயேச்சையை அவர்கள் காப்பாற்றிக் கொடுக்கவேண்டும் என்று வேண்டிற்று. மேற்குப் போர் முனையில் ஏற்பட்ட விபத்துகளிலிருந்து ஜப்பானுக்கு கிழக்கில் நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. இதற்கு சாதகமாக தாய்லாந்தின் உள்நாட்டு நிலைமை கெடுதலாகயிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென்ற வியாஜத்துடன் தாய் அதிகார வர்க்கமானது, லூசுக் பியல் ஸாங்ராம் என்பவருடைய தலைமையின் கீழ் ஒரு ராணுவ கோஷ்டியின் உத்தரவுப்படி அமுல் செலுத்திவருகிறது. இந்தத் தலைவர் பிரதான மந்திரி, பாதுகாப்பு மந்திரி, பர இலாகா மந்திரி, உள் நாட்டு மந்திரி, ஆகிய நான்கு ஸ்தானங்களேயும் வகிக்கிறார். இதைப்பார்த்தாலே அரசாங்கத்தாரிடம் இவருக்கு ஏற்பட்டிருக்கும் மனப்பான்மை நன்றாய் விளங்கும்.

இந்தத் தலைவரின் தீவிரமான தேசியக்கொள்கையைத் தெரிந்துகொண்டு, மோசடியாக, இந்தோ-சைனாவில் தாய்நாட்டிற்கு வெகு நாளாக உள்ள ஸ்தல பாத்தியங்களைக்கொண்டாடுவதில் தான் ஆதரவளிப்பதாகவும், விஷி அரசாங்கத்தில் பலஹீனம் ஏற்பட்டுவிட்டதால், தாய் நாட்டார்கள் தங்கள் பாத்தியதையை வற்புறுத்த நல்ல தருணம் வாய்த்துவிட்டதென்றும் ஜப்பான் ஆசை வார்த்தைகள் சொல்லியது.

சென்ற நவம்பர் மாதத்தில் மேகாங் நதிக்கரையில் தாய்லாந்துக்கும் இந்தோ-சைனுவுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. ஜப்பான் இருதரப்பாரையும் தூண்டிவிட்டது. ஜப்பானின் தூண்டுதலில்லாதிருந்தால் இந்த யுத்தமானது சீக்கிரம் முடிவடைந்திருக்கும். டிஸம்பர், ஜனவரி மாதங்களில் தனிப்பட்ட எதிர்ப்புகள் நடந்து வந்தன. புது வருஷம் துவக்கியவுடன் யுத்தம் வலுவடைந்து ஏராளமான விமானங்களைக்கொண்டு எதிர்ப்பும் நெருங்கிய கடற்படைச் சண்டைகளும் ஏற்பட்டன.

ஆனால், இருதரப்பாருக்கும் சண்டை செய்வதில் கொஞ்சமேனும் இஷ்டமில்லைபோலும். ஆகையால்தான் ஜப்பான் மத்தியஸ்தம் செய்ய ஆரம்பித்தபொழுது இருதரப்பாரும் அதை ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

சமரசப் பேச்சுகள் துவங்கிவிட்டன. மத்தியஸ்த பேச்சுகளில் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளிலிருந்து ஜப்பானின் அபிப்பிராயம் என்னவென்று நன்முய் விளங்குகிறது.

கிட்டாத நோக்கம்.

தாய்லாந்தின் கோரிக்கைகள் மிதமாகவேயிருக்கின்றன. அதாவது, மேகாங் நதிப்பிரதேசத்திலுள்ள எல்லைச் சரகத்தைத் திருத்தி அமைப்பதன் மூலம் சில தீவுகளை தாய்லாந்துக்கு இந்தோ-சைனு கொடுத்து விடுகிறது. மத்யஸ்தருடைய நிபந்தனைகள் இன்னும் கடுமையானவைகளாகயிருக்கக்கூடும். அதாவது— கலவரமாயுள்ள எல்லைச் சரகத்தில் ரோந்து செய்வதும் காம்ரான்குடாக்கடலில் சரியானபடி ஆக்கிரமணம் செய்தலும்.

ஜப்பானுடைய ராஜ்ஜிய தந்திரத்துக்குப் போதுமான பதில் கிடைத்துவிட்டது. புதிய ஏற்பாடுகளைப்பற்றி நிகழ்த்திய அநேக சொற்பொழிவுக்கும், மிகையாகச் சொல்லப்பட்ட, அன்னும், கொச்சின்-சைனு, கிழக்குத்தீவுகள், மலேயா ராஜ்ஜியம், பர்மா, இந்தியா, பிலிப்பைன்ஸ் தீவுகள், இவைகளிலுள்ள 5,000 லக்ஷம் ஜனங்களை விடுதலைசெய்ய நோக்கங்கொண்டு “தென்கிழக்கு ஆசியாவிலுள்ள தேசங்களின் விடுதலைக்காக ஸ்தாபிக்கப்பட்ட சங்கம்” என்று சொல்லப்பட்ட பேச்சுகளுக்கும் அடிப்படையாக, ஈவு இறக்கமன்னியில் ராஜ்ஜியங்களை விருத்தி செய்யவேண்டுமென்ற ராஜதந்திரம் குடிகொண்டிருக்கிறது. இந்த நோக்கத்தை அவசரமன்னியிலும், தீர்க்கமான ஆலோசனையுடனும் ஜப்பான் நிறைவேற்றிவருகிறது. ஜப்பானின் அபிப்பிராயப்படி தெற்கு சமுத்திரங்களின் ஒரு தேசபடத்தைப்பார்த்தால், ஜாவாவிலும், ஸுமத்ராவிலுமுள்ள ஐச்வர்யங்களை அடையவேண்டுமானுல் ஜப்பான் 3,000 மைல்கள் கடல்மார்க்கமாய்ச்செல்லவேண்டுமென்றும் பிலிப்பைன்ஸ் தீவுகளில் மானிலாவில் அமெரிக்க தற்காப்பு கடற்படைகளிருக்கும் வரைக்கும், சிங்கப்பூரில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் படைகள் காபந்து செய்துகொண்டிருக்கும் வரையிலும் ஜப்பானியப் புது உலக அமைப்பு எண்ணம், கெட்ட எண்ணமுள்ள கோஷ்டியாருக்கு ஒருநாளும் கிட்டப்போவதில்லையென்று நன்முய் வெளியாகும்.

பார்மோஸாவிலும் ஹைனானிலும் துருப்புகளைச் சேமிப்பதையும், இந்தோ-சைனாவிலுள்ள ஆக்கிரமிப்பு சேனையின் சங்கியையைக் கொஞ்சம் கொஞ்சமாக விருத்திசெய்வதையும், சிங்கப்பூர், மானிலா இவ்விரண்டு இடங்களிலிருந்து 850 மைலுக்கப்பாலுள்ள ஸைகானுக்கருகில் ஒரு விமான நிலயம் ஏற்பாடு செய்வதையும் பார்த்தால், இவைகள், ஜப்பான் பொருளாதார மேன்மைக்காக இன்று டச்சுக்காரருடனும் நாளையதினம் ஒருக்கால் மலேயாவுடனும் செய்துவரக் கூடிய பேச்சுகளுக்கு உதவியாக ராணுவபலத்தை உபயோகிப்பதற்காக, செய்யப்பட்ட-முன்னேற்பாடுகளென்று நினைக்கலாம்.

இதுவரையில் ஜப்பானுக்கு மதிக்கக்கூடியதாகவே லாபங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்குப்போர்முனையில் ஜெர்மனியின், தாக்குதலால் ஜனநாயக நாடுகளின் பொருளாதார, ஐச்வர்ய நிலைமைக்கு பங்கம் ஏற்பட்டுவிட்டால், தூரக்-கிழக்குப் பிரதேசங்களின் கோடியில் பிரிடனுடைய பாதுகாப்பு அமைப்பின் முக்கியஸ்தலமான சிங்கப்பூரைத் தரைவழியாகவும், கடல் வழியாகவும் தாக்குதல் சம்பவிக்கக்கூடும்.

வழியில் ஏற்படக்கூடிய இடையூறுகள்.

ஜப்பானியர்களில் உத்ஸாகமுள்ள பிரமுகர்கள் அபிப்பிராயப்படுகிறபடி ஜப்பான் ஆதிக்கம் பெறுகிறதென்பது, அவ்வளவு ஸுலபமான காரியமல்ல. மேற்கு திசையில் இதாலிய கடற்படை யுத்தம் செய்யாமலேயிருந்து வருகிறது. விஷி அரசாங்கம் சமாதான உடன்படிக்கையின் ஷரத்துகளை மீரக்கூடாதென்று வற்புறுத்துகிறது. இந்நிலைமையில், யாதொரு விதமான அபாயகரமான சங்கடங்களும் கடலில் ஏற்படாது என்று பிரிடன் நினைத்தது. கிறிஸ்துமஸ்ஸுக்கு முன்னால் ஸர் ராபர்ட் ப்ரூக் போபாம் என்பவரை தூரக்-கிழக்கு நாடுகளில் தளகர்த்தராக நியமனம் செய்தது. அதே காலத்தில் சிங்கப்பூருக்கு ஏராளமான படைகளும் வந்துசேர்ந்தன.

சிங்கப்பூரானது ஒரு முக்கியமான விமான நிலயம். அதற்குப் பின் பக்கம் அடர்ந்த காடுகள் உள்ள பிரதேசம். அதன் வழியாக படையெடுப்பு சேனைகள் சுலபமாகக் கடந்து வரமுடியாது.

மலேயாவின் வடபாகத்திற்கு ஒரு வலுவான விமானப்படை சமீப காலத்தில் அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்து பிரிடிஷ் அதிகாரிகள் தாய்நாட்டு எல்லைச் சரகத்தில் பாதுகாப்பு அவசியமென்று கருதுகிறார்களென்று விளங்குகிறது.

மேலும் டச்சு கடற்படையானது, க்ரூயிஸர்களுடனும், நாசகாரிகளுடனும், அநேக நீர்மூழ்கிகளுடனும் பவழக்கொடிகள் ஏராளமாயுள்ள சீனக்கடலிலும் மற்ற இடங்களிலும் உலாவிக்கொண்டிருக்கின்றன. இந்த சீனக்கடலின் ஸந்நிவேசங்களை நன்கு அறியாத மாலுமிகள் வந்தால் அபாயத்துக்குள்ளாவார்கள்.

ஐக்கிய நாடுகளின் கடற்படை.

இத்துடன் அநேக க்ரூயிஸர்கள், நாசகாரிகளடங்கிய ஆஸ்திரேலிய கடற்படையுமிருக்கிறது. சென்ற வேனிற்காலத்தில் தூரக்-கிழக்கு நாடுகளின் நிலைமை பயங்கரமாயிருந்ததால், பஸிபிக் சமுத்திரத்தின் மேற்குபாகத்தில் அமெரிக்காவின் கடற்படையின் முக்கியமான பாகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

அபிவிருத்தி செய்யப்படாமலிருக்கும் அமெரிக்காவின் கடற்படையின் பரிமாணத்தை கவனித்தாலும், அதன் சங்கியை, ஜப்பானியர்களிடமிருப்பதைக் காட்டிலும், நாசகாரிகளிலும், நீர்மூழ்கிகளிலும் அதிகமாகவே இருக்கிறது. தேவையானால் சிங்கப்பூர் நிலயத்தையும் பூராவாக அமெரிக்கா உபயோகப்படுத்தக்கூடும்.

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஜெர்மானியர்களிடமிருந்து அமெரிக்காவுக்கு அதிகத் தொந்தரவு ஏற்படவில்லை. அதற்காக பஸிபிக்கிலுள்ள அமெரிக்க கடற்படையின் யாதொரு பாகத்தையும் அட்லாண்டிக் சமுத்திரத்துக்குக் கொண்டுவர அவசியம் ஏற்படவில்லை. ஆனால், மூவர் உடன்படிக்கை ஏற்பாட்டை உத்தேசித்து, எந்நிலைமையிலும் பஸிபிக் சமுத்திரத்திலிருக்கும் 'கடற்படையானது பனமா கால்வாய்க்கு மேற்கேதானிருக்கவேண்டுமென்பது நிச்சயம். ஜப்பானியர்கள் ஜெர்மனியின் மனமார்ந்த அபிப்பிராயங்களை வெளியிட்டுவிட்டார்கள். ஜப்பான் யுத்தத்தில் இறங்கினாலும், இந்த ஸ்பஷ்டமான ராஜீய நோக்கங்களை மறைத்துவிடமுடியாது.

மேற்குப் போர்முனையில் பிரிடன் முழுதும் சீர்கெட்டு, பிரிடனுடைய அதிகாரம் ஒடுங்காதவரையில், மிதவாதிகள் சொல்லுகிறபிரகாரம் ஜப்பானியப் புது உலக அமைப்பு என்பதானது "எல்லோரும் பொதுவாக அபிவிருத்தியடையவேண்டும்" என்ற எண்ணத்துடன் நின்றுவிடுமென்று கருதப்படுகிறது. இதை நிலைநாட்ட பிரிடனும் அமெரிக்காவும் அவைகளுடைய நிலயங்களைக் கண் கொட்டாமல் பாது காப்பதோடு தானகவோ அல்லது பிறர் மூலமாகவோ, ஜப்பானுக்கு இடவசதிகள் கொடுக்காதபடி காபந்து செய்துவரவேண்டும்.

ராஜீய சாதனங்களளிப்பதை டச்சுக்காரர்கள் ஆக்ஷேபித்து எதிர்த்து நிற்கவேணுமானாலும், தங்கள் சுதந்திரத்தை ஸயாமியர்கள் காப்பாற்ற வேண்டியிருந்தாலும், நிச்சயமாக அவர்கள் அபாயங்களையும் கெடுதல் விளைவிக்கக்கூடியமார்க்கங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டிவரும். அவர்களுக்கு ஆங்கில-அமெரிக்க நாடுகளின் பூரண ஆதரவு நிச்சயமாய் ஏற்படக்கூடுமென்று நம்பிக்கையுண்டானால் தான் அவர்கள் இந்த அபாயகரமான எதிர்ப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள். நம்முடைய க்ஷேமத்துக்காக மட்டும் நாம் அம்மாதிரியான நம்பிக்கை உறுதியை அவர்களுக்கு அளிக்கவேண்டும்.

பஸிபிக் சமுத்திரத்தில் பிரிடிஷ், அமெரிக்க ஏற்பாடுகள்.

சிங்கப்பூரின் வலிமை.

டெயிலி டெலக்ராப் பத்திரிகையில் யுத்தப் படிப்பில் தேர்ச்சிபெற்ற ஒருவர் எழுதுகிறுர்.

ஆஸ்திரேலியாவிலிருந்தும் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலிருந்தும் ஏராளமான விமானங்கள் சிங்கப்பூருக்கு வந்துகொண்டிருக்கின்றன என்கிற சமாசாரத்தையும் கரிபியன், பஸிபிக் சமுத்திரத்திலும் பாதுகாப்பு பரப்புகளையும் விமான நிலயங்களுக்கு வேண்டிய ஸ்தலங்களையும் அமெரிக்கா தீர்மானம் செய்து வருகிறதையும் கவனித்தால் ஜப்பானின் வெறும் கத்தி வீச்சுக்கு இவை எதிர் முறையான ஏற்பாடுகளென்று எண்ணக்கூடும்.

கரிபியன் கடலில் நடக்கும் மாறுதல்கள் 'அட்லாண்டிக் மகா சமுத்திரத்துக்கும் பஸிபிக் மகா சமுத்திரத்துக்கும் போகும் மார்க்கமாகிய பனமாக் கால்வாயின் க்ஷேமத்தைக் கோரக்கூடியவை. உண்மையில் அவைகள் நாம் அமெரிக்காவுக்கு நிலயங்களை விட்டுக்கொடுத்திருக்கும் கொள்கைக்கு சாதகமானவை.

ஜப்பானுடைய நிலையைக்கண்டு ஐக்கிய நாடுகள் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கருதியவண்ணம் இப்பொழுது அமெரிக்கா பஸிபிக் மகா சமுத்திரத்தில் ஏற்பாடுகளெல்லாம் மேலும் மேலும் செய்துகொண்டு வருகிறது. சமுத்திரப் பரப்புகளையும் விமான நிலயங்களையும் பகிர்ந்து ஏற்பாடு செய்வதைப் பார்த்தால் இவைகள் விசேஷமான யுத்த தந்திர நோக்கத்துடன் செய்யப்பட்டவைகளென்று கருதலாம். அலாஸ்காவின் வடகோடியிலிருந்து குவாம் தென்கோடிவரையில் இந்த நிலயங்கள், பஸிபிக் சமுத்திரத்தில் ஒரு வளையம் போட்டதுபோலும், வளையத்தின் மத்தியில் பேர்ள் துறைமுகத்தில் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள ஐக்கிய நாடுகளின் கடற்படையை வைத்தும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஹாங்காங்குக்கு ஐநூறு மைலுக்கப்பாலிருக்கும் மானிலா தீவில், ஒரு சிறிய, ஆனல், மிகவும் சாமர்த்தியமுள்ள அமெரிக்க கடற்படையும் ஏறக்குறைய துருப்புகளின் ஒரு தொகுதியடங்கிய ரக்ஷகசேனையுமிருக்கின்றன.

ஹாங்காங்கிலுள்ள பிரிடிஷ் ராணுவப்படையின் பரிமாணத்தை மதிக்க முடியாது. ஆகிலும், மேற்படி நிலயத்தைப் பாதுகார்த்துக்கொள்ளுவோம் என்று வெளியிட்டிருக்கிறுர்கள். அந்த ரக்ஷகசேனை வலுவுள்ளதாயிருப்பதோடு, கீர்த்தியோடும் அது யுத்தம் செய்யுமென்பதில் சிறிது சந்தேகமுமில்லை.

ஹாங்காங் என்பது பஸிபிக் சமுத்திரத்திலுள்ள பிரிடிஷாரைச் சேர்ந்த வெகு தூரத்திலிருக்கும் ஒரு நிலயம். சிங்கப்பூர்தான் மேற்படி சமுத்திரத்துக்குச் செல்லத் திறவுகோல் போல ஏற்பட்டிருக்கிறது.

மத்தியதரைக்கடலுக்கு ஜிப்ரால்டரிருப்பதுபோல் இந்து மகா சமுத்திரத்துக்கு சிங்கப்பூர் இருந்து வருகிறது. அது கெட்டியாகவிருக்கும் வரையில் உலகத்தின் மேற்கு பாகத்திலிருந்து ஜப்பான் தனிப்பட்டிருக்க வேண்டியதுதான். ஆகையால் சிங்கப்பூரின் ஸ்திதியிலிருந்து ஜப்பானுக்குப் பயமுண்டாகியிருக்கிறது. நம்முடைய போக்குவரவு சாதனத்தின் சுயேச்சையையும் நம்முடைய யுத்த நோக்கங்களில் முக்கியமான சுதந்திரத்தையும் இந்தத் துறைமுகமானது நமக்கு நிச்சயமாய் அளிக்கக்கூடியது.

சிங்கப்பூரின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கூடுமான வரையில் உயர்தரமானதாகச் செய்திராவிட்டால் அது பெரிய தோஷமாயிருந்திருக்கும். யுத்த முஸ்தீபுகள் ஏற்பாடு செய்யும் உத்தியோகஸ்தர்கள் இவ்வளவு முக்கியமான பாதுகாப்புகளைச் செய்யாமலிருக்கமாட்டார்கள்.

சிங்கப்பூரானது ஒரு அதிக வலிமையுள்ள ஒரு நிலயம். சுறுசுறுப்புடன் யுத்தம் செய்வதற்குத் தேவையான ஒவ்வொரு வகை முஸ்தீபுகளும் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதை ஒருபொழுதும் தகர்க்கமுடியாதென்று கருதப்படுகிறது. அதன் பீரங்கிகள் குண்டுகள் வீசஆரம்பித்தால் நமக்கு வெற்றி நிச்சயம். அநேகமாய் சத்துருக்களிடமிருந்து எதிர்ப்பு, தரைப்பக்கத்திலிருந்துதான் ஏற்படக்கூடும்.

இந்தப்பக்கத்திலிருந்து எதிர்ப்பு ஏற்படுவதற்கு தாய்நாட்டின் சம்மதம் அவசியம். கட்டாயப்படுத்தி தாய்நாட்டின் சம்மதத்தையும் சத்துருக்கள் அடைந்துவிடலாம். ஆனால், அவர்கள் வெகுதூரம் கடந்து செல்லவேண்டும். ஏராளமான பொருள் செலவிடவேண்டும். அப்படியே செய்து எதிர்ப்பு ஆரம்பித்தாலும் இந்த முயற்சி பிரயோஜனமற்றதாகவே ஆகிவிடும்.

பாதுகாப்பு ஏற்பாட்டில் விமானபலத்தின் ஆதிக்கம் முக்கியமான ஒரு அம்சம். சிங்கப்பூரில் ஏற்கனவேயிருந்த சதுரவ்யூஹ விமானப்படையை, ஜப்பானிய விமானப்படை சந்தித்திருக்கக்கூடுமென்பது நிச்சயமாகயில்லை. இப்பொழுது அதிகமாகக்கொண்டுவரப்பட்டிருக்கும் விமானங்களின் சங்கியையையும் கவனித்தால் ஜப்பானிய கடற்படைக்கு ஜயமுண்டாவதற்கு நம்பிக்கை ஏற்படவே முடியாது. இதாலியின் கடற்படைக்கு நாசம் ஏற்பட்டுவிட்டது. புதிதான சண்டைக்கப்பல்களை பிரிடன் கட்டிமுடித்துவிட்டது. ஆகையால் நம்முடைய நிலைமை இன்னும் வலுவாக மாறிவிட்டது.

பஸிபிக் ஸமுத்திரத்தில் துணிகரமாக ஜப்பான் நுழைய ஆரம்பித்தால், சிங்கப்பூரைத் தாக்காமலிருக்க முடியாதென்பது நிச்சயம். கிழக்கு இண்டீஸ் தீவுகளை நேராடித்தாக்குவது அவ்வளவு லாபகரமானதல்ல. இந்தச்சிறிய தீவுகள் உள்ள ஸமுத்திரமானது யுத்தக்கப்பல்களின் அணிவகுப்புக்குப்போதுமான இடவசதியுள்ளதல்ல. மேலும், டச்சுக்காரர்களிடம் நவீன முறையில் கடற்படை விமானங்கள் கொண்ட ஒரு வலுவுள்ள சிறிய விமானப்படையும், உபயோகப்படக்கூடிய ஒரு சிறிய கடற்படையுமிருக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் ஒத்தாசை நமக்கு சித்தித்து விட்டால் பஸிபிக்கிலுள்ள பிரச்னைகள் முற்றிலும் மாறுதலடைந்து விடுமென்பதில் சந்தேகமில்லை. அதின் கடற்படை நிலயங்களை விஸ்தரிக்கச்செய்யும் தந்திரத்தைப் பார்த்து ஜப்பான் எச்சரிக்கை அடையாமலிருக்க முடியாது.

சென்ற யுத்தத்தில், பிரிடிஷ் படைகளின் ஒரு தொகுதியின் உதவியோடு, தரைமார்க்கமாய் எதிர்த்து இரண்டு மாதங்களுக்குள் ஸிங்டா என்னுமிடத்திலுள்ள தனிப்பட்ட ஜெர்மன் நிலயத்தை ஜப்பான் கைப்பற்றியது. ஆனாலும், சிங்கப்பூரின் ஏராளமான பாதுகாப்பு ஏற்பாட்டை நோக்குங்கால், அபாயத்தோடு கூடிய துணிகரமான செய்கையாகிய, சிங்கப்பூரைத் தாக்குதல், என்ற எண்ணத்தை ஜப்பான் கைக்கொள்ளுமென்பது நம்பத்தக்கதில்லை.

யுத்தத்தில் சாஸ்திரங்களின் உபயோகம்.

W. L. ப்ராக் என்ற சாஸ்திர நிபுணர் சமீபத்தில் நிகழ்த்திய ஒலிபரப்பில் கூறியதாவது:—

இந்த யுத்தமானது சாஸ்திர நிபுணர்களாலும், யந்திர சாஸ்திரிகளாலும் நடத்தப்பட்டுவருகிறதென்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்வது அவசியமானது.

எல்லாவிதமான யந்திரங்களும், போக்குவரவு சாதனங்களும், மின்சார உபாயங்களும், வருஷாவருஷம் மாறுதல்களடைந்துவரக்கூடிய இந்நாளில் நாமிருந்து வருகிறோம். யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களும் இம்மாதிரியே மாறுபாடடைந்து வருகின்றன. டாங்கிகளும், விமானங்களும், ரேடியோவும் யுத்தம் நடக்கநடக்க அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

யுத்தம் ஆரம்பித்தபொழுது நிலைமை பின்வருமாறு. கடற்படையிலும், தரைப்படையிலும், விமானப்படையிலும் சாஸ்திர நிபுணர்களடங்கிய ஒரு ஆராய்ச்சி இலாகா இருந்துவந்தது. அவர்களில் பெரும்பான்மையோர் நம்முடைய வர்த்தகசாலைகளிலும் அல்லது அரசாங்க ஆராய்ச்சி சாலைகளிலும் வேலை செய்து நம்முடைய தொழில்களின் அபிவிருத்திக்கு ஒத்தாசை செய்துவந்தார்கள். அல்லது கலாசாலைகளில் ஆராய்ச்சிமட்டும் செய்துவந்தார்கள்.

யுத்தம் ஆரம்பிக்கும் சின்னங்கள் உண்டானபொழுது, பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்திலுள்ள சாஸ்திர சங்கங்களின் முதன்மையான அரசாங்கச் சங்கமானது சாஸ்திர நிபுணர்களின் சங்கியையை கணக்குப்பார்க்க ஒரு மத்திய நிலயம் ஏற்பாடு செய்தார்கள். ஏறக்குறைய நமது நாட்டில் பத்தாயிரம் கணக்கான சாஸ்திர ஆராய்ச்சி செய்பவர்களிருக்கிறார்கள். குறைச்சலாக கணக்கிட்டாலும், 1,600 ரஸவாத சாஸ்திரிகளும், 1,000 பதார்த்த விக்ஞான சாஸ்திரிகளும்,

500 கணித சாஸ்திரிகளும், 700 ஜந்து சாஸ்திர நிபுணர்களும், 1,500 பேர்கள் வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியிலும் இவைபோன்ற அநேகருமிருக்கிறார்கள். இவர்களில் பேர்பாதி தொழில்களுக்கு முக்கியமான ஸ்தானங்களில் அமர்ந்திருந்தார்கள். தங்களுடைய மாணுக்கர்களுக்குக் கற்பிக்கவேண்டியதற்காக சில நபர்களை அவர்கள் நியமிக்கவேண்டியதாயிற்று. கலாசாலைகளிலும், சிற்ப சாஸ்திர கலாசாலைகளிலும், மூன்று அல்லது நான்கு ஆயிரம் சாஸ்திர நிபுணர்களிருந்து வந்தார்கள். அவர்கள்தான் நம்முடைய கடற்படை, ராணுவம், விமானப்படை இவைகளுக்குப் பின்னணிகள்.

சாஸ்திர நிபுணர்கள் என்ன செய்கிறார்கள்.

ராணுவத்தில் வேலை செய்துவருகிற சாஸ்திரிகளின் ஒரு சிறிய பகுதியைத் தவிர நமது நாட்டிலுள்ள சாஸ்திர நிபுணர்களெல்லாம் அமைதியுள்ள தொழில்களில் அமர்ந்திருந்தார்கள். யுத்த வேலைகளில் உழைப்பதற்கு அவர்களுக்கு சம்மதமேயில்லாமலிருந்தது. ஆனால், அவசியகாலங்களில் புதிய ஏற்பாடுகளை உண்டாக்குவதில் பிரிடிஷார்கள் மிகவும் சாமார்த்தியசாலிகள். இவைகளின் ரகசியங்களை நான் வெளியிடக்கூடாதபோதிலும், நம்முடைய எதிராளிகளின் சாஸ்திரப்பயிற்சியோடு பிரிடிஷாரின் சாஸ்திர ஆராச்சியை ஒப்பிட்டால் நமது சாஸ்திரிகள் பின்வாங்கமாட்டார்களென்று தங்களுக்கு ஞாபகமூட்ட, ஜெர்மனியைச்சேர்ந்த ஒரு கதையை உங்களுக்குச்சொல்லுகிறேன்.

"கிராப்ஸ்பீ யுத்தக்கப்பலில் நான் கைதியாகயிருந்தேன்" என்று தலையங்கமிட்ட ஒரு புஸ்தகத்தில், புஸ்தக ஆசிரியரான காப்டன் டவ் என்பவர், காந்தக் கண்ணிகளைப்பற்றி, கிராப்ஸ்பீ காப்டனுை லாங்க்ஸ்டாப் வெளியிட்ட அபிப்பிராயத்தை உதாரணமாய்ச் சொல்லுகிறார். "நாங்கள் இந்த ஆயுதத்தை பத்து வருஷங்களுக்கு முன்னாலேயே கண்டுபிடித்துவிட்டோம். இந்த அபாயத்துக்கு எதிரிடையான மருந்தைக்கண்டுபிடிக்க நாங்கள் எட்டு வருஷங்களாகப் பிரயத்தனம் செய்து வருகிறோம். எங்களுடைய காரியம் இன்னும் பலிதமாகவில்லை. நாங்கள் எட்டு வருஷங்களுக்கு முன்னால் துவக்கியவேலையை பிரிடிஷ் கடற்படை இப்பொழுது ஆரம்பிக்கவேண்டும்" என்று அவன் சொன்னான். காந்தக்கண்ணிகளை ஒழிக்க மாற்று ஏற்பாட்டை பிரிடிஷார் எட்டு வருஷங்களிலல்ல, எட்டு வாரங்களுக்குள் கண்டுபிடித்துவிட்டார்கள்.

நம்முடைய சாஸ்திரிகள் என்ன செய்கிறார்களென்று பார்ப்போம். யுத்தம் ஆரம்பமான காலத்தில் அவர்களெல்லோரையும் வேலைகளிலமர்த்த முடியாமலிருந்தபோதிலும், இப்பொழுது தேவையான நபர்கள் கிடைப்பது துர்லபமாகயிருக்கிறது. மத்திய சங்கத்தாருக்கு, 60 பதார்த்த விஞ்ஞானி சாஸ்திரிகள் தேவையென்றும், நூறு மின்சார யந்திரசாஸ்திரிகள் தேவையென்றும், கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. அநேகம் பேர்கள் எல்லாவிதமான மின்சார வேலைகளிலும் பணிசெய்து வருகிறார்கள். மின்சாரமானது, போக்குவரவுக்கும், அடக்குமுறைக்கும், களவு கண்டுபிடிப்பதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. அது

நவீன யந்திரங்களுக்கு நாடிகள் போலவும் ஞானேந்திரியங்கள் போலவுமிருக்கின்றது. தற்காலத்திய சண்டைக் கப்பலிலிருக்கும் மின்சார கம்பிகளின் அமைப்பையும், அவைகள் மூலம் செய்திகள் அனுப்புவதையும், பீரங்கிகளை பிரயோகிப்பதையும், பீரங்கிகள் அடிக்கவேண்டிய தூரத்தை நிர்மாணம் செய்ய வேண்டி கணக்குகளைத் தயாரிப்பதையும், ஒலிபரப்புச் செய்திகளை அனுப்புவதையும், திசை காட்டும் கருவியை கட்டுப்பாட்டில் வைக்கவும், இன்னும் அநேகவிதமான வேலைகளைச்செய்யவும் உபயோகப்படுத்துவதை கவனித்தால் நான் சொல்லுவது நன்று விளங்கும். யுத்த அவசியத்துக்காக, அமைதி காலத்தில் எதிர்பார்க்கப்படாத வண்ணம் மின்சார சக்திகள் அதிகமாக உபயோகப் படுத்தப்படுகின்றன. முக்கியமாக ஒலிபரப்புக்கருவி உற்பத்திசெய்வதில் நம்முடைய மின்சார யந்திர சாஸதிரிகளும் பதார்த்த விக்ஞான சாஸ்திரிகளும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் வெடிகுண்டுகளிலுள்ள, காலம் கிரமித்து வெடிக்கும் வர்த்திகளையும், பொறிகளையும் வேலை செய்யாதபடி செய்ய ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். மேலும், மிகவும் சிக்கலான அமைப்புகளுள்ள சத்துருக்களின் ஆயுதங்கள் பிரிடிஷ் வசமானபொழுது அவைகளின் மர்மத்தை வெளியாக்க சிலர் வேலை செய்கிறார்கள். ரஸவாத சாஸ்திரிகள் எல்லாவிதமான பதில்வெட்டு சாமான்களை உற்பத்திசெய்ய பிரயத்தனம் செய்துவருகிறார்கள். வெடிமருந்து செய்வதிலும், காயங்களுக்கும், வியாதிகளுக்கும் சிகிச்சைக்கு வேண்டிய சேர்மான மருந்துகளைப் புதிதாகக் கண்டுபிடிக்கும் வைத்தியர்களுடனும் சேர்ந்து உழைக்கிறார்கள். யந்திர சாஸ்திரிகளும் பதார்த்த விக்ஞான சாஸ்திரிகளும், விமானப்போரிலிருந்து உண்டாகும் அநேக பிரச்னைகளை சர்ச்சை செய்வதிலும், வெடியிலிருந்து உண்டாகும் மாறுதல்களையும், ஒலிகளின் அமைப்பையும் கட்டட தளவாடங்களைச் சிக்கனமாக உபயோகிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

பிராணி சாஸ்திர நிபுணர்கள், நம்மிடமிருக்கும் உணவுப்பொருள்களின் சேமிப்புகளில் பூச்சிகள், தொத்துவியாதிகள் வராதபடி பாதுகாக்கவும் யுத்த காலத்தில் விவசாயத்தில் நூதனமானமுறைகளை அனுஷ்டிக்கவும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். மேலே சொல்லியவைகள் சாஸ்திரத்தை உபயோகப் படுத்தும் சிலமுறைகள். சாஸ்திர முறைப்படி செய்யப்படும் யுத்தப் பிரச்னைகளை பரிசீலனைசெய்து முடிவுக்குவரும் வேகம் நாளுக்குநாள் நம்பக்கூடாதபடி அதிகரித்துவருகிறது. அமைதியிருக்கும் நாளில் பத்து வருஷங்களில் ஏற்படக் கூடிய சாஸ்திர முன்னேற்றமானது இப்பொழுது ஒரு வருஷத்திற்குள் முடிவடைகிறது. "இம்மாதிரியாகவே அமைதி காலத்திலும் ஏன் நடைபெறக்கூடாதென்று" கேள்வி உண்டாகிறது. இதேமாதிரியாக அழுக்குகள் வியாதிகள் புகை சூழ்ந்ததும் கோரமானதுமான நகரங்கள் இவைகளை நிவர்த்திப்பதிலும் பூமிகளை அதிகமாக உபயோகப்படும் வழியில் பண்புசெய்வதிலும், தொழிற் சாலைகளை அபிவிருத்தி செய்வதிலும், இது போன்ற அநேக வேலைகளிலும் இந்த சாஸ்திர நிபுணர்கள் ஒத்துழைப்பார்களேயானால், அநேக நூற்றாண்டுகளாக

நிவர்த்திக்கமுடியாத பிரச்னைகள் சில வருஷங்களுக்குள் தீர்ந்துவிடக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஒன்றுமட்டும் தடஸ்தமாக நான் சொல்லுவேன். இந்த யுத்தநெருக்கடியில் சாஸ்திரப்பயிற்சியுள்ளவர்கள் தேசத்திற்கு உதவி செய்ய தங்களாலியன்ற அளவு பாடுபட்டுவருகிருர்கள். அமைதி காலத்தில் இம்மாதிரியான தேசீய இயக்கத்தில் இவர்கள் எவ்வளவு உத்ஸாகத்துடன் கலந்து கொள்வார்களென்பதையும், அந்த இயக்கத்தில் அவர்கள் எவ்வளவு திருப்தியுடன் வேலை செய்யக்கூடுமென்பதையும் சற்று யோசித்துப்பாருங்கள்.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

லோபோடென்னுக்கு சமாதானம்.

லோபோடென் தீவுகளை பிரிடிஷார் 4—3—41-ல் தாக்கியது அத்தீவு வாசிகளை எவ்வளவு களிக்கச்செய்ததோ, அவ்வளவு டாக்டர் கோயபல்ஸை கோபமூட்டியிருக்கிறது. பின் மூன்று நாள், ஜெர்மன் ரேடியோவுக்கு வேலை, ஜெர்மானியர்கள் எட்டியுள்ள ஆனல் ஹிட்லரின் வடகிழக்கு போர்முனையில் முக்கியமான இத்தீவுகளில் ஏன் தூங்கிக்கொண்டிருந்தார்கள், என்பதற்கு சமாதானம் சொல்லுவதிலேயே கழிந்தது.

5—3—41-ல் ஜெர்மன் ரேடியோ 'பிரிடிஷார் வட நார்வேக்கு அடுத்தாற்போலுள்ள தீவுகளைப் பிடிக்க முயன்ருர்கள்' என்றது. தாக்குதலின் நோக்கம், அத்தீவுகளைப் பிடிக்க அல்ல, ஆனல் மீன் எண்ணெய் செய்யும் மெஷின்களை அழிக்க, என்பது உலகம் அறிந்ததே. அந்த எண்ணெய் ஜெர்மன் யுத்த யந்திரத்துக்கு அத்தியாவசியமானது. தாக்குதலின் நோக்கமும் சித்தித்தது. அந்ததீவுகள் கோட்டைகளால் காபந்து செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படியாயின் ஏழு ஜெர்மன் கடற்படை ஆட்களும் (அவர்களில் ஒருவன் ஆபீஸர்) கொல்லப்பட்டதும், 215 மாலுமிகளும் யந்திரம் ஓட்டுகிறவர்களும் பிடிப்பட்டதும் எப்படி?

மேலும், பெர்லின் கூறிற்று 'கொஞ்சநேரம் இருந்துவிட்டு சத்துரு ஜெர்மானியர்கள் எதிர் நடவடிக்கைகளுக்கு அஞ்சி அவசரம் அவசரமாகச் சென்றனர்'. தாக்குதல் அவசரமின்றி சிக்குதலையின்றி திட்டப்படி நடந்தது என்று எல்லா ரிபோர்ட்டுகளும் கூறுகின்றன. 'எதிர் நடவடிக்கை' என்றது பிரிடிஷார் இருந்தவரை

தின்றே ஒன்றுதான். ஒரு ஜெர்மன் பாம்பர் தோன்றிற்று. யுத்தக்கப்பல்கள் சுட ஆரம்பித்தவுடன் ஒரே ஓட்டமாக அது ஓடிவிட்டது. பிரிடிஷார் திரும்பிய பின் ஜெர்மன் எதிர்நடவடிக்கை' மும்முரமாக நடந்தது; ஒரு நார்வே ஸிவிலியன் 'அழும்புக்காக' சுடப்பட்டான்; பிரிடனுக்கு தங்களைக்கூட்டிக்கொண்டு போகும்படி கேட்டுக்கொண்ட 300 நார்வே தேசபக்தர்களின் வீடுகளும் சுட்டுக்கொளுதப்பட்டன.

அதன் சுருக்கம்.

5—3—41-ல் பெர்லின் ரேடியோ 'நார்வே மீன் பிடிக்கும் படகுகளை முழுக்கிய ஒரு சிறு தாக்குதலை' குறித்தது. மறுநாள் அதே ரேடியோ 'பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் அவைகளிலிருந்து வெடிகள் சாந்தமானவும் காபந்தில்லாத நார்வே கிராமங்களை அழித்து வருகின்றன என்பது வெளியான பிறகும் நீடிக்கப்பட்டது' என்றது. உண்மை என்னவெனில், தாக்குதல்—நீண்டதோ சின்னதோ—ஒன்பது ஜெர்மன் வியாபாரக்கப்பல்களையும் (அதில் ஒன்று 10,000 டன்) நாஸிகள் வசமிருந்த ஒரு நார்வேக்கப்பலையும், ஒரு ஆயுதந்தாங்கிய டிராலரையும் மொத்தம் 18,000 டன் கப்பல்களை முழுக்கடித்தது.

முடிவாக 7—3—41-ல் அது 'தாக்குதல் மிக்க பலமான படைகளால்' நடத்தப்பட்டதாகவும், அதே மூச்சில் 'அது பிரிடனின் பலஹீனத்தைக் காட்டுகிறது' என்றும் ஒன்றுக்கு ஒன்று பொருத்தமின்றி கூறிவிட்டு, 'தாக்குதல் நார்வே ஜனங்களை பயமுறுத்தச் செய்த முயற்சி' என்று முடித்தது. நார்வே ஜனங்கள் அவ்வளவு காபரா அடைந்தனர்—அதாவது அவர்கள் நல் உடைதரித்து தாக்கினவர்களை வரவேற்றார்கள்; பிரிடிஷார் பயமுறுத்தியதும் இம்மாதிரி, தீவு வாசிகளுக்கு உணவு, ஸோப், இதர சௌகரியங்கள் அளித்தார்கள்; ஜெர்மானியர்கள் நார்வேயைப்பிடித்த முதல் அவர்களிடமிருந்த இச்சாமான்களை ஜெர்மானியர்கள் திட்டம் வகுத்து பிடுங்கிச் சென்றிருக்கிறார்கள்.

பல்கேரியா மீது பக்க ஒளி.

4—3—41-ல் பெர்லின் ரேடியோ நாஸி 'டாயிஷ் ஆல்கெமின் ஜீடங்' என்ற பத்திரிகையிலிருந்து பின் வரும் பாகத்தை வாசித்தது 'பல்கேரியாவில் ஜெர்மனி புகுந்ததானது முக்கூட்டின் அன்வய அம்சம் நிரூபிக்கப்பட்டது. அதனுடைய வ்யதிரேக அம்சமானது கிரீஸின் வீதியிலிருந்து எளிதில் ஊகிக்க கிடைக்கிறது'. கிரீஸின் 'தலையெழுத்து' இதுவரை என்ன என்பதைப்பார்ப்போம். இது, கிரீஸிலிருந்து கடைசி இதாலி விரோதி துறத்தியடிக்கப் பட்டிருக்கிறான்; அல்பேனியாவில் முக்கியமான அநேக இடங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன; 1,22,000 இதாலியர்கள் மாண்டனர், அல்லது காயமடைந்தனர், அல்லது காணோம்; 200 யுத்த விமானங்கள் அழிந்தன. அச்சு ரீதியாக இந்தப்பலன்கள் வ்யதிரேகந்தானே.

மற்ருெரு நாஸி பேப்பர், ‘பிராங்பர்டர் ஜீடங்’ என்பது ‘பல் கேரியா அச்சில் சேர்ந்தது ஜெனரல் வேவலின் படையெழுச்சி உபயோகமில்லை என்பதைக் காட்டுகிறது’ என்று கூறுகிறதாம். இது இதாலியர்களுக்கு மிக்க ஆறுதல் அளிக்கும். ஏனெனில் அவர்கள் இது வரை ஜெனரல் வேவல் படையெடுத்தது மிக்க பயனுள்ளதாயிருந்தது என்று இதற்கு மாறாக நம்பி வருகிறர்கள்.

ஜெர்மன் பொய்யே இங்கிலாந்தைப் புகழ்வதாகும்.

28—2—41ல் அல்பேனியாவில் நடந்த ஆகாய யுத்தத்தில் ஆர். ஏ. எப்பின் வெற்றியால் ஜெர்மானியர்கள் திகிலடைந்தனர். அன்று 26 இதாலிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன, ஒன்பதுக்கு மிக்க சேதம், இரண்டு கிரேக்கர்களின் விமானந் தாக்கி பீரங்கிகளால், சுடப்பட்டன. மார்ச்சு 3-ல் பெர்லின் ஒரு பிரட்டை கற்பனை செய்தது. அது, அல்பேனியாவில் 1—3—41-ல் ஒரு ஆகாய யுத்தம் நடந்ததாக. அதில் இதாலிய ஆகாயப்படை 8 பிரிடிஷ் க்ளேஸ்டர் வேட்டை விமானங்களையும் ஒரு ஸ்பிட் பயரையும் சுட்டதாம்.

அன்று அல்பேனியாவில் ஆகாய யுத்தமே கிடையாது. இதாலியர்களே அவ்வாறு கூறவில்லை.

இதாலிய கிரேக்கச் சண்டையில் ஆர்.ஏ.எப்.க்கு மிக்க நஷ்டம் என்று ஜெர்மன் ரேடியோ புழுகினலும், சென்ற 3 வாரங்களில் அல்பேனியாவில் 78 இதாலிய விமானங்கள் அழிந்தன என்பதை ஒருவரும் மறைக்கமுடியாது.

ஜப்பானுக்கு பிரிடிஷ் கப்பல்கள்.

5—3—41-ல் ஜெர்மன் தந்திக்கம்பியில்லா ஆபீஸ் ஒஸாகாவிலிருந்து (ஜப்பான்) ‘பிரசித்தி பெற்ற பி அண்டு ஓ., கப்பல் கம்பெனி ஒன்றுதான் ஜப்பானுக்கு கப்பல்கள் விட்டுக்கொண்டிருந்தது. அவர்களிடமும் இப்பொழுது கப்பல்கள் இல்லாததால் பம்பாய்க்கும் ஜப்பானுக்கும் இடையே போகும் கப்பல்களை நிறுத்திவிட்டார்கள்’ என்று செய்தி வந்ததாகக் கூறிற்று.

டாக்டர் கோயபல்ஸின் துரதிர்ஷ்டத்தைப் பாருங்கள், அன்றே ஜப்பானின் டோமை ஏஜன்ஸி பி அண்டு ஓ., கப்பல்கள் ஜப்பான் துறைமுகங்களுக்கு வழக்கம் போல் வரும் என்று கூறிற்று.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

ரோம்-டோகியோ-பெர்லின் ஒப்பந்தத்தை ஜெர்மானியர்கள் தப்பர்த்தம் செய்கிருர்கள்.

7—3—41-ல் இந்துஸ்தானியில் ஜெர்மானியர் ஒலிபரப்பினர். அதில் ஜம்பமாக ‘முக்கூட்டு ஒப்பந்தம் எங்கு எங்கு பிரிடன் தலை தூக்கப்பார்த்ததோ அங்கு அங்கு அதை நசுக்க ஏற்பட்டிருக்கிறது’ என்று சொன்னர்கள்.

இவ்வாறு செய்ததில் ஜப்பானியர்களின் திருஷ்டிகோணத்தை ஜெர்மானியர்கள் புறக்கணித்தனர் என்று தோன்றுகிறது. 28—2—41-ல் ஜப்பானியர் ஆங்கிலத்தில் ஒலிபரப்பினர். அதில் சந்தேகமற 'முக்கூட்டு வேறு வல்லரசு எதையும் குறித்து அதற்கு விரோதமாக சேர்ந்ததல்ல' என்றனர்.

சுறுசுறுப்பான பிரிடிஷ் கப்பற்பட்டரைகள்.

7—3—41-ல் நாஸிகள் அராபி பாஷையில் ஒலிபரப்பினர். அதில் குறிப்பிடப்படாத சில ஸ்டாக் ஹோம் (ஸ்வீடன்) செய்திகள், பிரிடிஷ் கப்பற்படைக்கு நேர்ந்த நஷ்டங்களுக்கு ஈடு செய்ய கப்பற்பட்டரை தொழிலாளிகளின் முயற்சிகள் பலிக்காது, என்று கூறுவதாக சொல்லப்பட்டது. 5—3—41-ல் பிரிடனின் அட்மிராலிடி முதல் லார்டு, மிஸ்டர். ஏ. வீ. அலெக்ஸாண்டர் சொன்னார் 'பிரிடிஷ் பட்டரைகளிலிருந்து செய்து வந்த புதுக்கப்பல்கள், வெளியூர்களிலிருந்து வந்த கப்பல்கள், சத்துருக்களிடமிருந்து பிடிபட்ட கப்பல்கள், இவைகளால் சத்துருவால் அழிக்கப்பட்ட நமது கப்பல்களில் 3-ல் 2 பங்குக்குமேல் ஈடு செய்யப்பட்டுவிட்டது.'

'இதற்கு எதிரிடையாக சத்துருவுக்கு 20,00,000 டன்னுக்குமேல் கப்பல்கள் முழுகியோ, பிடிபட்டோ, அவர்களாலேயே அழிக்கப்பட்டோ இருக்கின்றன. நடுநிலைமை துறைமுகங்களில் 10,00,000 டன்னுக்குமேல் உபயோகமில்லாமல் அடைபட்டுக் கிடக்கின்றன.'

ருஷ்யாவும், பல்கேரியாவும்.

3—3—41-ல் நாஸிகள் பெர்லினில் ஒரு ஒலிபரப்புச் செய்தார்கள். பல்கேரியா முக்கூட்டில் சேர்ந்ததால் ஸோவியத் ருஷ்யாவுடன் அதன் உறவுகள் பலப்படும், என்று அதில் சொன்னார்கள். மாஸ்கோ செய்யும் அர்த்தம் வேறு. ஸோவியத் கவர்ன்மெண்டு ரீதியாக, பல்கேரியாவின் நடவடிக்கைகள் பால்கன்ஸில் யுத்தத்தை பரவுவதாகும், அதன் போக்கு ஸோவியத்தால் ஆதரிக்க முடியாது, மாஸ்கோவிலிருக்கும் பல்கேரிய ஸ்தானிகரிடம் ஸோவியத் வெளிநாட்டு இலாகா கூறியது—என்று.

முக்கியமான விளம்பரம்.

யுத்த சம்பந்தமான புகைப்படங்கள்.

ஸ்ரீ-தர்பார் அவர்கள் உத்தரவின் பேரிலும், அவர்களின் அன்பார்ந்த உதவியின்பேரிலும், புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயத்தின் மெம்பர்கள் இதுமுதல் பிரசங்கங்களுக்கு வெளியூர்களுக்குப்போகும் காலத்தில்யுத்தத்தின் வெவ்வேறு அம்சங்களை விளக்கிக்காட்டக்கூடிய புகைப் படங்களின் கோர்வைகளையும் எடுத்துக்கொண்டு போய் ஜனங்களுக்குக் காண்பிக்க வசதி ஏற்பட்டிருக்கிறதென்று யுத்த அறிக்கை நிலயம் சந்தோஷத்துடன் அறிவிக்கிறது.

இந்த நிகழ்ச்சிகள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் ‘ இருபதாவது நூற்றாண்டு பாக்ஸ் பிலிம் கம்பெனி’யாரால் எடுக்கப்பட்ட புகைப்படங் களும், பம்பாய் துரைத்தனத்தாரைக்கொண்டு இந்திய கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கும் ஒரு சங்கத்தாரால் இந்தியா சம்பந்தமான சில விஷ யங்களைப்பற்றி தயாரிக்கப்பட்ட புகைப்படங்களும் சேர்ந்தவைகள். ஒவ் வொரு நிகழ்ச்சியிலும் மூன்று தனித்தனிப் படங்கள் காட்டப்படும். இந்தப் படங்கள் காண்பிப்பதால் யுத்த அறிக்கை நிலயத்தின் பிரசங்கங்களுக்கும், மேற்படி நிலயத்தின் வாரப்பதிப்பு புஸ்தகத்துக்கும் அதிக மதிப்பு ஏற் படக்கூடுமென்று யுத்த அறிக்கை நிலயம் நம்புகிறது.

புதுக்கோட்டையின் யுத்த நிதிக்காக உழைத்துவரும் கமிட்டியார் யுத்த அறிக்கை நிலயத்திற்கு ஒரு மோட்டார் வண்டியை நன்கொடை அளித்திருக்கிறார்கள். இந்த வண்டியில் புகைப்படம் காண்பிவிக்கக்கூடிய யந்திரங்களையும், திரைகளையும், புகைப்படங்களையும் பிரசங்கம்செய்யும் ஸ்தலங்களுக்கு எடுத்துச்செல்ல சௌகரியமாயிருக்கும். ஆனால், இம்மாதிரி புகைப்படங்களோடுகூடிய பிரசங்கங்களைச்செய்ய வசதி ஏற்படுத்திக் கொள்ளவும், ஒவ்வொரு இடத்திலும் மாதாமாதம் ஒவ்வொரு புதிதான படக்கோர்வையைக்காண்பிக்கவும், பிரசங்க ஸ்தலங்களை அறுபது இடங் களுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை ஸமஸ்தான வாசிகள் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவைகள் என்ன வென்றால் :—

(*a*) பிரசங்கங்கள் சாதாரணமாக **மாலை 6 அல்லது 6-30 மணிக்குத்** துவக்கப்படும்.

(*b*) யுத்த அறிக்கை நிலயத்தின் மோட்டார் ஒருநாளில் இரண்டு ஊர்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் பொதுஜனங்கள் **தவராமல் குறிப்பிட்ட டயத்தில்** பிரசங்கம் செய்யப் போகுமிடத்தில் ஆஜராகியிருக்க வேண்டும்.

இந்தப்படங்களை ஆயிரம் பேர்களுக்குக்குறையாமல் சௌகரியமாய்ப் பார்க்கக்கூடுமென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகையால் உங்கள் கிராமத்தில் பிரசங்கம் செய்யப்படுமென்று பிரசுரம் செய்த அளவில்,

அந்த இடத்தில் கூடுங்கள்,

சரியானபடி குறிப்பிட்ட டயத்தில் வாருங்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XXXVI.

1941—				மணி.
மார்ச்சு ...	22, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
	23, ஞாயிற்றுக்கிழமை.	கோட்டைக்காடு ...	,,	6.00
		கரம்பக்குடி ...	,,	6.30
	24, திங்கட்கிழமை ...	ராணி பெண்பாடசாலை ...	காலை	10.25
		நார்த்தாமலை ...	மாலை	6.00
		தாயினிப்பட்டி ...	,,	6.30
	25, செவ்வாய்க்கிழமை.	சே[illegible]பள்ளிக்கூடம் ...	,,	5.30
		செம்மட்டிவிடுதி ...	,,	6.00
		மழையூர் ...	,,	6.30
	26, புதன்கிழமை ...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
	27, வியாழக்கிழமை ...	கிள்ளனூர் ...	மாலை	6.00
		கிள்ளுகோட்டை ...	,,	6.30
	28, வெள்ளிக்கிழமை ...	காரையூர் ...	,,	6.00
		கீழத்தானியம் ...	,,	6.30

பிரஸங்கம் XXXVII.

	29, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
	30, ஞாயிற்றுக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
		திருவரங்குளம் ...	,,	6.00
		கொத்தகோட்டை ...	,,	6.30
	31, திங்கட்கிழமை ...	குளவாய்ப்பட்டி ...	,,	6.00
		வெண்ணுவல்குடி ...	,,	6.30
ஏப்ரல் ...	1, செவ்வாய்க்கிழமை.	கடயக்குடி ...	,,	6.00
		மிரட்டுநிலை ...	,,	6.30
	2, புதன்கிழமை ...	பட்டணம் ...	,,	6.00
		பில்லமங்கலம் ...	,,	6.30
	3, வியாழக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.	,,	3.30
		வெள்ளனூர் ...	,,	6.00
		செம்பாட்டூர் ...	,,	6.30
	4, வெள்ளிக்கிழமை ...	ஒடுக்கூர் ...	,,	6.00
		நாங்குப்பட்டி ...	,,	6.30

புதுக்கோட்டை ஸமஸ்தானம்

யுத்த நிதிக்காக போடப்படும்

அதிர்ஷ்டச் சீட்டு.

(ஈ-தர்பாரவர்கள் உத்தரவின்பேரிலும் ஆதரவின் பேரிலும் புதுக்கோட்டை யுத்தநிதி எண்டெர் டெயின்மெண்ட் கமிட்டியாரால் நடத்தப்படுகிறது.)

இந்த யுத்த நிதியை ஆதரியுங்கள்

டிக்கெட்டுகளை வாங்குங்கள்

முடிவு தேதி 15—6—41

சீட்டு குலுக்கும் தேதி 23—6—41

நமது மன்னர் அவர்களின் வருஷவர்த்தனை தினத்தன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏராளமான பரிசுகள்.

300 பரிசுகள்.

1-வது பரிசு	ரூபாய்	7,500	
2-வது பரிசு	,,	5,000	
3-வது பரிசு	,,	2,500	
2 பரிசுகள்	,,	1,000	வீதம்
5 ,,	,,	500	,,
90 ,,	,,	100	,,
100 ,,	,,	50	,,
100 ,,	,,	15	,,

Sri Brihadamba State Press, Pudukkottai, 3,000—22-3-41.